T-UN 422

தமிழ்ப் பொழில்

தமிழ்ச் சங்கத் திங்களிதழ்

துணர் : 60   மலர் : 10

T. 2749

உள்ளுறை

1. பெரும்புலவர் சிந்தாமணிச்செல்வர் 465
சிறுவை நச்சினார்க்கினியன்

2. இறை வணக்கம் 477
டாக்டர் சரளா ராசகோபாலன்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

3. அறத்தொடு நிலை தமிழ் நாகரிகத்தின் தனிக்கூறு 480
இராம. இராமமூர்த்தி
ஔவையார் அரசினர் மகளிர் கல்லூரி
காரைக்கால்

4. கலை கூறும் கற்பனை 486
டாக்டர். இரா. குழந்தைவேலு. தமிழ்ப் பேராசிரியர்
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்-4

5. தொல்காப்பியம் மெய்ப்பாட்டில் காண்டிகை 495
பேராசிரியர் ச. பாலசுந்தரம்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2015

துணர்: 60 இரத்தாட்சி — தை மலர்: 10

ஜனவரி — பிப்ரவரி 1985

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

பெரும்புலவர் சிந்தாமணிச் செல்வர் (1896-1985)

- சிறுவை. நச்சினார்க்கினியன்

“மகாவித்துவான் உயர்திரு மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அறிவிற் சிறந்தவர், ஒழுக்கத்திற் சிறந்தவர், தூய வெள்ளாடையர்,

தூய மேனியும், தூய சிந்தையும், தூய வாழ்க்கையும் கொண்டு ஐம்புல ஒழுக்கத்திற் சிறந்த பெரியார். அறிவும் ஒழுக்கமும் அவிர் தரும் அவர் முகம் ; முற்றிய அறிவினர் ; வற்றிய உடலர். வற்றிய உடலரா ? சமண நோன்பியோ இவர் ? நடுங்க நோற்று உடலும் சுருங்கியதாகுமோ ? இவர்தம் சிந்தாமணிச் சொற்பொழிவுகளை, இவர் கூறிய உரைகளைக் கேட்டோர் இவர் சமணரே என்பர் ; அன்று அன்று திருமால் செந்நெறியில் செழித்திடும் செம்மலர் இவர்.

– கு. கோதண்டபாணி (குறள் நெறியாளர்)

"பெரும்புலவராகிய அவர்களைக் "சிந்தாமணிச் செல்வர்" என்று குறிப்பதிலும், இற்றைத் தமிழ்ப் புலவர்கள் 'உச்சிமேற் கொள்ளும் சிந்தாமணி" என்பது பொருந்துவதாகும்."

- பேராசிரியர் க. அன்பழகன்

"அவர்களுடைய சொற்பொழிவுகள் இன்னோசை மிக்க எழில் ஓவியங்கள், வீணை வேணுவின் இனிய ஒலியை அவர்கள் பேசும் போது நுகரலாம். இனிய தமிழ்ச் சொற்களே விரவி வரத் தேனொழுக்குப் போல அவர்கள் விரிவுரைகள் அமையும்"

- கீ. இராமலிங்கனார்

"உத்தமப் பண்புகள் அனைத்தும் அவரிடம் ஒருங்கே குவிந்து கிடப்பதை மட்டும் நான் காணவில்லை ; முதன்மை பெற அவை ஒன்றோடொன்று போராடும் அபூர்வக் காட்சியினையும் காண் கிறேன். சான்றாண்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், இரக்கம், தண்ணளி, இன்சொல், மலை பெயரினும் நிலை பெயரா மாண்பு, செந்தமிழ்ப் புலமை, தீந்தமிழ் பாட்டிசைக்கும் திறம், சமயப் பொறை, நா நலம், நூலறிவுடன் கூடிய மதிநலம், தெய்வ பக்தி, உயர்ந்த சீலம், நட்புக்குப் பாத்திரமாதல், செய்ந்நன்றி அறிதல், குருபக்தி இன்னோரன்ன பிற நலங்களெல்லாம் தாம் உய்யப் பிணங்குகின்றன அவர் மாட்டு"

- வல்லை. பாலசுப்பிரமணியம்

"மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் நுண் மாண் நுழைபுலம் உடைய அறிஞர். தமிழர் பெருமை கொள்ளத்தக்க வகையில் பண்பாட்டுச் சிறப்பைப் பெற்றவர். அவர் தம் தூய உள்ளத்தைத் தெளிந்த உரையில் கேட்கலாம். விழுமிய வாழ்க்கையிலும் பார்க்கலாம். முதியவர்கள் போற்றத்தக்க சான்றாண்மையும் அவர்கள் வாழ்வில் உண்டு ; இளைஞர்கள் மகிழத்தக்க புத்துணர்ச்சியும் ஆர்வமும் அவர்களின் வாழ்வில் உண்டு".

டாக்டர் மு. வரதராசனார்

இப் புகழ் உரைகளுக்கு உரிய சான்றோர்தான் மே. வீ. வேணுகோபாலர். ஆழ் கடலில் மூத்துக் குளிப்பவர் போல் தமிழ்க் கடலின் ஆழங் கண்டவர் ; முத்தும் மணியும் கொணர்ந்து தமிழ் மக்கள் உய்யக் கொடுத்த உ த் த ம ர். சிலர் பிறக்கின்றனர், வாழ்கின்றனர் பரியுடன் கரியுடன், நாளை அவர் இல்லை என்று ஆனபோது அவரை மறக்கின்றோம். ஆனால் இச்சான்றோர் தருகை நீண்ட தயரதன் போன்று பொன்னினும் மணியினும் உயர்ந்த தமிழ்ச் செல்வத்தை அள்ளித் தந்த இலக்கண தாத்தா. இது ஒரு செல்லப் பெயர் மட்டும் அன்று. தொல்காப்பியத்தைப் புத்தகம் இன்றிப் பாடம் சொல்லும் பொருளும் இவர்தம் அறிவுப் பேழையில் நிறைந்து வழியும்.

ஆரவாரத்தையும் புகழையும் விரும்பாது அடக்கத்தின் திருவுருவமாக விளங்கிய இவரை நாடிவந்து நாட்டங் கொண்டன சில பட்டங்கள் :

கச்சியம்பதியில் "*சிந்தாமணி*" நூலினைப் பாடஞ் சொல்லிய தால் "*சிந்தாமணிச் செல்வர்*" எனத் திரு. வி. க. அவர்கள் போற்றிய இப்பட்டம் வந்து சேர்ந்தது.

தமிழ்க் களஞ்சியமாக விளங்கி, ஒவ்வொரு வாரமும் சென்னை அப்துல் அக்கீம் உயர் பள்ளியில் தமிழியல் மன்றத்தின் சார்பில் இலக்கண விரிவுரைகள் நிகழ்த்தியதால் 29—10—1967 ல் பேரறிஞர் அண்ணா அவர்களால், "*செந்தமிழ்க் களஞ்சியம்*" எனும் பட்டம் சூட்டப் பெற்றார்.

"கூத்தநூலினைச்" செம்மையுடன் பதிப்பித்த காரணத்தால் தமிழ்நாடு அரசு இயல் இசை நாடக மன்றத்தினர் "*கலைமாமணி*" பட்டம் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

மொழிக்குத் தொண்டு செய்த செம்மலர் ஆதலின் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ 10,000 கொண்ட பொற்கிழி அளித்துப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

அமெரிக்க உறவு பூண்ட 'உலகப் பல்கலைக் கழகம்' 1—10—81 இல் இவருக்கு "*டாக்டர்*" (D. Litt,) பட்டம் வழங்கிப் பெருமை கொண்டது.

மதுரைக் காமராஜ் பல்கலைக் கழகம் "*பேரவைச் செம்மல்*" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

தமிழ்கூறும் நல்லுலகம் அளித்த பட்டம் "*பெரும்புலவர்*" (மகாவித்துவான்) என்பது.

இலக்கணத் தாதாவாகிய இவருக்குப் பல்கலைக் கழகங்கள் "டாக்டர்" பட்டம் வழங்காவிடினும் பல்கலைக் கழகங்களில் இணைந்து ஆய்வு செய்து "டாக்டர்" பட்டம் பெற்ற பலருக்கு அவரவர் வேண்டியவாறு குறிப்புகள் வழங்கி மகிழ்ந்தவர்.

பெரும்புலவர் அவர்கள் துன்முகி ஆண்டு, ஆவணித் திங்கள் 17ஆம் நாள் (*31.8.1896*) திங்கட்கிழமையன்று பிறந்தார்கள். அன்று கிருஷ்ண ஜயந்தி, ஆதலின் பெற்றோர் "வேணுகோபாலன்" என்ற பெயரிட்டனர். பிறந்த இடம் சென்னை சைதாப்பேட்டை பக்கலில் '*மேட்டுப்பாளையம்*' ஆகும். தந்தையின் பெயர் வீராசாமி தாயின் பெயர் *பாக்கியம்* அம்மையார். தமையன்மார் நால்வர் ; தமக்கையர் இருவர் ; தங்கை ஒருவர்.

மக்கள் கல்வி நலம் கருதிக் குடும்பம் சைதைக்குக் குடி புகுந்தது. வேணுகோபாலர் சைதை ஆசிரியர் பயிற்சி மாதிரிப் பள்ளியில் ஓராண்டு பயின்றார். வறுமை கால்கொள்ள இவர் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்க்கப்பட்டார். பின்னர் சைதைக்கு ஆறுகல் தொலைவில் உள்ள எருமையூர் பகுதிக்குக் குடும்பம் மாற்றமடைந்தது. நில வருவாய் பற்றாதுபோகச் சென்னைப் புரசைபாக்கத்தில் குடிபுகுந்தனர். வேணு கோபாலர் படிப்பதில் ஆர்வங்கொண்டு கையிற் கிடைத்த நூல்களைப் படிக்கலானார்.

சென்னை வேப்பேரியில் உள்ள எஸ். பி. சி. கே. அச்சகத்தில் *அச்சுத் தேய்க்கும்* பணியில் அமர்ந்து வாரம் ஒன்றுக்கு ரூபாய் மூன்று ஊதியமாகப் பெற்றார். காலை 8 மணி முதல் மாலை 8 மணி வரை வேலை.

அறிஞர் சிலர் சேர்ந்து நடத்திய இரவுப் பள்ளியில் படித்தார் விளையாட்டுகளில் ஈடுபடவில்லை.

வழக்குரைஞர் டி. என். சேஷாசலம் அவர்களிடம் தமிழும் ஆங்கிலமும் பயின்றார். (திரு டி. என். சேஷாசலம் தமிழ்ப் புலமை உடையவர். "கலா நிலையம்" எனும் சிறந்த இதழினை நடத்தி வந்தார். சென்னை ஒய். எம். சி. ஏ., மண்டபத்தில் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் செய்தார்). அந்நாளில் கல்வித்துறைத் துணை இயக்குநராய் இருந்த வி. ஆர். அரங்கநாதன் அவர்களிடமும் இரவுப் பள்ளி நடத்திய கே. மாசிலாமணி, மற்றும் சி. நமச்சிவாயர், வழக்குரைஞர் எம். தாமோதரம் பிள்ளை, வழக்குரைஞர் மோகனரங்கம் பிள்ளை முதலியவர்கள் இவர்தம் ஆங்கிலப் புலமை நலத்திற்கு உதவினார்கள்,

இத் தமிழ்ப் பித்தர். அக்காலத்துப் புகழ் வாய்ந்த வழக்குரைஞர் திவான்பகதூர் டி. இரங்காசாரியாரிடத்தில் குற்றேவல் புரியும் தொண்டரானார். இப்பணியினை மிக்க மகிழ்ச்சியோடு கூறுவார் "தூக்குத் தூக்கியாய் இருந்தேன்" என்று இதற்குப் பிறகு வழக்குரைஞர் மோகனரங்கம் அவர்களிடம் எழுத்தராய்ப்பணி செய்தார். அங்கு வழக்குகள் சம்பந்தமான கோப்புகளை ஓய்வு நேரங்களில் படித்துணர்ந்து தம் ஆங்கிலப் புலமைக்கு எருவிட்டார்; ஆங்கிலத் தட்டச்சும் பயின்றார். பின்னர்ச் சிறிது காலம் ஆயுள் ஒப்பந்த அலுவலகம் ஒன்றில் எழுத்தராய்ப் பணி செய்தார்.

முறையே தமிழ்ப் புலமை பெற விழைந்து, ஆழ்வார்கள் வரலாறுகள் எழுதிய இலக்கண வித்தகர், பேராசிரியர் கா. ர. கோவிந்தராசரிடம் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றார். நம் ஆசிரியர் பெருந்தகையிடம் அவர்தம் வாழ்நாள் முழுவதும் நன்றி உணர்வுடன் நடந்து கொண்டார். புலமை நலம் சிறந்து விளங்கப் பெற்ற காலத்தில் தம் ஆசிரியரிடம் பாடம் கேட்க வந்த புலவர் வே.த அருச்சுன முதலியார், கு. மதுரை முதலியார், மங்கலங்கிழார், குப்புசாமி முதலியார் ஆகியோரிடம் சிறந்த நண்பராக விளங்கினார்.

இவர்தம் நல்லாசிரியர் இலக்கணக் களஞ்சியம் கா.ர, கோவிந்தராஜனார் அவர்களின் சீரிய முயற்சியால் சென்னை முத்தியாலுபேட்டை உயர்பள்ளியில் தமிழாசிரியர் ஆனார். அங்குத் தலைமைத் தமிழாசிரியராய் விளங்கிய மணிதிருநாவுக்கரசர் சிறந்த நண்பரானார். அங்குப் பணியாற்றிய மயிலை சிவ முத்து, எஸ்.எஸ். அருணகிரிநாதர் முதலியவர்கள் நட்பும் கிடைத்தது. இவர்கள் நாளும் புரசையிலிருந்து முத்தியாலுபேட்டைக்கு வருகை தந்து பணி மேற்கொண்டது பெருந்துன்பமாய் இருந்தது. புரசையில் லூத்தரன் மிஷன் பெப்ரீஷயஸ் நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியரின் அரிய நட்புக் கிடைக்கப்பெற்று, அப்பள்ளியில் தமிழ் ஆசிரியர் ஆனார். கருவிலே திருவுடையார் என்பர் அஃதே போன்று இவர்கள் பிறப்பிலேயே ஆசிரியர் தன்மை உடையவர்களாய் விளங்கினர் இவர்கள் பணியேற்ற பிறகு அப்பள்ளி உயர்பள்ளி ஆயிற்று. இவரே அங்குத் தலைமைத் தமிழ் ஆசியராய் விளங்கினார்.

இந்நிலையில் பட்டம் பெறாத தமிழ் ஆசிரியர்கள் உயர் பள்ளியில் தமிழ் பயிற்றுபவர்களாய் இருத்தல் கூடாது என்ற சட்டம் உண்டாயது. புகழ் வாய்ந்த தமிழாசிரியர்கள் பலர் தம்

பதவிகளை இழக்க வேண்டிய நிலை உருவாகியது. இந்நிலையில் வள்ளல் கா. நமச்சிவாயர் தலையிட்டு முயன்று "ஏற்கெனவே பத்து ஆண்டுகள் தமிழ் ஆசிரியராய்ப் பணி செய்தவர்கள் தொடர்ந்து அப்பணியில் ஈடுபடலாம்" என்ற நிலையை அமலாக்கினார். தமிழாசிரியர்கள் வாழ்வு சிறந்து விளங்க வாழ்ந்தவர் பேராசிரியர் கா. நமச்சிவாயர். இதனால் பயன் பெற்றவர்கள் மே.வீ. வேணுகோபாலர், மயிலை சி. முத்து, எத்திராஜலு, எஸ்.எஸ். அருணகிருநாதர் ம க. தணிகாசலம் முதலியோர் ஆவர். இஃதேபோல் நூற்றுக்கணக்கானவர்களுக்குப் பயன் ஏற்பட்டது. அதன் பின்னர் இவர் "வித்துவான்" தேர்வு எழுதி வெற்றி பெற்றார். அக்காலத்தில் "வித்துவான்" பட்டத்திற்கு உரிய அங்கியும் (Gown) இருந்தது.

இதற்கிடையில் 1924 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 5 ஆம் நாள் சானகியம்மாள் எனும் நல்லறச் செல்வியை வாழ்க்கைத் துணை நலமாய் ஏற்றார்கள். திருமதி சானகியம்மாள் மூன்று ஆண் மக்களை ஈன்றார்கள். மூத்த மகன் சீனிவாசன், இரண்டாம் மகன் சக்கரவர்த்தி. மூன்றாம் மகன் கிருஷ்ணமூர்த்தி ஒன்றரை வயதில் உலக வாழ்வை விட்டு அகன்றார். முதல் மகன் நிதி வங்கி ஒன்றில் பணி செய்து ஓய்வு பெற்றார். இரண்டாம் மகன் தமிழ் முதுகலைப் பட்டம் பெற்றுச் சென்னை புதுக் கல்லூரியில் தமிழ்த் துணைப் பேராசிரியராய் விளங்குகிறார். பெரும் புலவர் வாழ்க்கைத் துணைவி 1950 ஆண்டில் உலக வாழ்வை நீத்தார்கள். சிந்தாமணிச் செல்வர் பெருந்துயரத்தில் ஆழ்ந்தார்.

பெரும் புலவர்தம் மொழித் திறம் வளர வளர அவர் மேற்கொண்ட பணிகளும் மாற்றமடைந்து கொண்டே வந்தன. இவர்கள் பணியாற்றிய பள்ளியின் மேற்பார்வையாளர்கள் ஜெர்மானிய பாதிரிமார்கள் ; தமிழில் புலமையுடையவர்கள். ஆகவே, பள்ளியில் இவர்களின் மதிப்பும் செல்வாக்கும் உயர்ந்தது. இவர்களிடம் தமிழ் பயின்ற ஜெர்மன் அறிஞர் டாக்டர் ஸ்டாலின்' அவர்தம் மனைவியார் டாக்டர் டபள்யூ கிராபே, குமாரி ஹீல்கார்டு எல்வின் குறிப்பிடத் தக்கவர்கள். குமாரி ஹில்கார்டு எல்வினின் தந்தையார், டாக்டர் எல்வின் அவர்கள், பெரிய புராணத்தை ஜெர்மன் மொழியில் செய்யுளாகவே மொழி பெயர்த்துள்ளார் என்ற செய்தியைக் கேட்ட நம் பேராசிரியர் அளவு கடந்த மகிழ்ச்சிக்கு உள்ளானார்.

செந்தமிழ்க் களஞ்சியமாகிய இவர் 1938 ஆம் ஆண்டு உடல் நலம் காரணமாக ஆசிரியர் பணியினின்றும் ஓய்வு பெற்றார். பணியில் ஓய்வு பெற்றாலும் அவர்களது தமிழ் நெஞ்சம் ஓய்வு பெற

மறுத்தது. பெப்ரீஷியஸ் பள்ளியோடு தொடர்புடைய குரு குழு சமயக் கல்லூரியில் (Luthern Theological College, Gurukul, Madras) சைவ வைணவ நூல்கள் பயிற்றுவிக்கும் தொண்டில் ஈடு பட்டார்கள். தமிழ் ஆர்வம் உள்ளவர்களுக்குத் தம் வீட்டிலேயே தமிழ் கற்பித்து வந்தார்கள். இத்துடன் எழுத்துப் பணியும் பதிப்புப் பணியும் தொடர்ந்தன. தாமே எழுதிய நூல்கள் பெரும்பாலும் பள்ளி மாணவர்களுக்கு உரியவை. இதனால் பல்லாயிரக் கணக்கான வர்களுக்கு இவர்தம் பெயரும் புகழும் பரவியது. இவர் மாணவர் களுக்கு என எழுதிய ஒரு நூலுக்கு "இந்து" இதழ் சூட்டிய புகழாரம் :

"......The book deserves to be placed in the hand of school children as an introduction to elegant Tamil. The Tamil idiom is here found in its pristine form, unmarred by trans ations of the English Language and idiom which characterise many modern Tamil books for the young.

"The Hindu" 28—11—78

இலக்கண வித்தகர் வேணுகோபாலனார் நூல் ஒன்றினுற்குத் தமிழ்தென்றல் திரு.வி.க. அவர்கள் தம் "நவசக்தி" 3.4.1938 இதழில் கூறும் திறனாய்வுக் குறிப்பில் புகழ் மலர் ஒன்றினையே மே.வீ வே.விற்கு அணிவித்து மகிழ்கிறார்.

திரு. வேணுகோபாலப்பிள்ளை, விளம்பரமின்றி-ஆரவாரமின்றி அமைதியில் நின்று தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வோருள் ஒருவர் திரு பிள்ளை, நூல்களைப் பிழையின்றிப் பதிப்பிப்பதில் பேர் பெற்றவர் திரு. வேணுகோபாலர். அரிச்சந்திர புராண ஆழியில் மூழ்கி, நல்மணிகளைக் குடைத்தெடுத்து, அவைகளைத் திறம்படக் கோவை செய்துள்ளார். நூலை முற்றிலும் பதிப்பதிலும் அதைச் சுருங்கிய முறையில் கதைப் போக்கில் தொடர்ச்சி கேடுறா வண்ணம் பதிப்பிப்பது அரிது என்பது அத்துறையில் ஈடு பட்டுள்ளோர்க்குத் தெரியும். உரைநடை பழைய இலக்கண வரம்பிற்கு அரண் செய்து நிற்றல் சிறப்பாகக் குறிக்கத் தக்கது. தீந்தமிழ்ச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்துள்ள உரைநடையைக் கொண்ட கதைச் சுருக்கம், ஒரு பூங்காவெனப் பொலிகிறது. அதனிடைத்தென்றற் காற்றும் வீசுகிறது".

உலகப்பெரும்போர் தொடங்கிய காலத்துப் பலர் சென்னையை விட்டுப் பல பகுதிகளுக்குக் குடியேறினர். ஆசிரியர் மே.வீ.வே. அவர்களும் காஞ்சியைப் புகலிடமாகக் கொண்டார்கள். குடும்பத் துடன் சென்றார்கள். அங்குள்ள ஜைனப் பெருமக்கள் ஒன்றுகூடி

டி.எஸ். ஸ்ரீபால் அவர்கள் தலைமையில் பெரும்புலவர் அவர்களை அணுகிச் 'சிந்தாமணி' நூலினைப் பாடஞ் சொல்லும்படி வேண்டினர். அதற்கு இணங்க அங்குள்ள தமிழ் மக்கள் உளங்கொளச் சீரிய முறையில் சிந்தாமணி நடைபெற்றது. பாடஞ் சொல்லி முடித்தவுடன், பெருவிழா எடுத்துச் "சிந்தாமணிச் செல்வர்" என்ற பட்டம் அளித்தும், "சிந்தாமணி நினைவு மலர்" ஒன்று வெளியிட்டும் பொன்னாடை அணிவித்தும் பெருமை செய்தார்கள். கச்சியம்பதி மக்கள், இவர்களின் சிந்தாமணி வகுப்புடன் நிற்கவில்லை. பலருக்கு ஆண்கள் பெண்கள் இரு பாலாருக்கும் தமிழ் பயிற்றுவித்து 'வித்துவான்' பட்டம் பெற வழி கோலினார்கள். பலர் பட்டம் பெற்றுச் சிறந்தார்கள்.

சென்னைப் புரசைப்பாக்கத்தில் "கம்பர் கழகம்" என்ற அமைப்பு எஸ். ஆர். சடகோபன், எஸ். இராமசாமி முதலியவர்களால் நடத்தப்பட்டு வந்தது. அக்கழகத்தின் வழி கா. ர. கோவிந்தராசனலாரும் இவரும் தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டனர். சென்னை நக்கீரர் கழக மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழுச் சார்பில் "நெல் எனும் பொருள் பற்றி டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார் தலைமையில் சிறந்ததோர் ஆய்வுரை நிகழ்த்தினார், திருவள்ளுவர் கல்லூரிச் சார்பில் சென்னை மாநிலக் கல்லூரியில் "*தொல்காப்பியம் எழுத்து*" பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்கள். சென்னை மாணவர்கள் மன்றத்தின் வழி பேராசிரியர் மயிலை சிவ. முத்து அவர்களுடன் இணைந்து பல ஆக்கப் பணிகள் செய்தார்கள்.

புரசைப்பாக்கத்தில் கே. சோமசுந்தரம் (செட்டியார்) என்பவர் ஆசிரியரின் சிறந்த நண்பர்'. நாற்பது ஆண்டுக்காலப் பழக்கம். சிறந்த தமிழ் அறிஞர். தமிழ்நாடு அரசு துணைச் செயலாளர்களில் ஒருவர். இவர் பல தமிழ் மாணவர்களுக்கும் அன்பர்கட்கும் பாடஞ் சொல்லி வந்தார். இவர்கள் மறைந்த பின்னர் இவர்கள் பெயரால் "சுந்தரர் தமிழ்க் கல்லூரி" என்ற அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பிற்கு நம் பெரும் புலவர் முதல்வராக இருந்து இலக்கண நூல்களைப் பாடஞ் சொல்லலானரர். தமிழ்ப் புலவர், முதுகலை முதலிய வகுப்புகள் நடைபெற்றன. இந்த அமைப்பில் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்களும் உடனிருந்து பல பாடங்களைப் பயிற்றுவிப்பார்கள். இந்த அமைப்பிற்கு ஆணி வேராகவும் பேராசிரியரின் அணுக்கத் தொண்டராகவும், மகனாகவும் அமைந்து தொண்டு செய்து கல்லூரிப் பணிகளை இயக்குபவர் புலவர் சச்சிதானந்தம் ஆவர். இவர் இரயில்வே நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

மேற்கு ஜெர்மன் கோல்ஸ் பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெறும் பண்பாட்டுக் கழகத்தில் ஆசிரியர் மே. வீ. வே. அவர்கள் பெயரால் நூலகம் ஒன்று அமைத்து அதில் இவர்கள் எழுதிய, பதிப்பித்த நூல்களை விலைக்கு வாங்கி வைத்துள்ளார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அறக் கட்டளை நினைவுச் சொற்பொழிவில் 4, 5-4-'66-ல் "*தமிழ் அன்றும் இன்றும்*" எனும் பொருள் பற்றி அறிஞர்கள் மகிழும் வண்ணம் மிகச் சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகமும் தமிழ்ப் பாடநூல் நிறுவனமும் வெளியிட்ட பல நூல்களைப் பதிப்பிப்பதில் துணை நின்று சிறந்த முறையில் வெளிவரக் காரணமாய் இருந்தார்கள். பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் நூல்களும் இவர்கள் பார்வை இல்லாது வெளிவரா.

சென்னை பவானந்தர் ஆலோசனைக் குழு உறுப்பினருள் ஒருவராய் இருந்து அக்கழக வாயிலாக வெளிவந்த "*யாப்பருங்கல விருத்தியுரை*" எனும் நூலினை, அருஞ்சொல் அகராதி, பொருட் குறிப்பு அகராதி, மேற்கோள் அகராதி முதலிய பிற்சேர்க்கைகளுடன் திருத்தப் பதிப்பாகச் செய்து தந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கம்பராமாயணம் திருத்திய பதிப்புக் குழுவில் பணியாற்றினார்கள். தமிழ்நாடு அரசின் உயர்பள்ளி பாட நூற் குழுவின் தலைவராய் விளங்கி அரிய பணி ஆற்றினார்கள்.

பெரும்புலவரின் குறிக்கோள், தமிழ் நூல்கள்-சிறியவை யாயினும் - பெரியவையாயினும் - பிழையின்றித் திருத்தமான முறையில் கண்கவர் வனப்புடன் வெளிவருதல் வேண்டும் என்பதே, ஆகவே, பதிப்புத் துறையில் தன்னால் இயன்றவரையில் பெரிதும் உழைத்துப் பயின்று, பல நுட்பங்களை அறிந்து அதன்படி பதிப்பிப்பதில் வல்லவரானார். இவர்கள் பெற்றுள்ள பதிப்புத் துறைப் பயிற்சியைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ் நாட்டுப் பதிப்பாளர்கள் பலர் முன்வந்தனர். அவர்களுள் இவரிடம் நீங்காத பற்றும் பாசமும் வைத்திருந்த ஒருவர் எம். ஆர். அப்பாதுரை அவர்கள்.

சிந்தாமணிச் செல்வர் அவர்கள் இலக்கண இலக்கியத் துறையில் மட்டுமல்லாது சமய நூல்களையும் நன்கு பயின்றவர்கள். வைணவ சமயத்தில் ஈடுபாடு உடையவர்கள். சமயக் காழ்ப்பு அற்றவர் : கீதையை நன்கு அறிந்தவர். வைணவ மகாசங்கத்தில்

ஈடுபட்டு அவர்கள் கூட்டும் வைணவ மகாநாடுகளில் பல முறை பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

இவர்களது வாழ்நாளில் சிறந்த பகுதி பேராசிரியர் கா. நமச்சிவாயருடன் இருந்து தமிழ்த் தொண்டு ஆற்றியது. 1934-1935-ஆம் ஆண்டுகளில் கா. நமச்சிவாயர் அவர்கள் வ. சுப்பையா (பிள்ளை) அவர்களுடன் இணைந்து தோற்றுவித்த திருவள்ளுவர் திருநாட் கழகக் குழுவில் அங்கம் வகித்து இரண்டு ஆண்டுகள் திருவள்ளுவர் திருநாளினை மேல்நாட்டுந் தமிழ் அறிஞர்களுக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பி மிகச் சிறந்த முறையில் கொண்டாடினார். கண்கவரும் அரிய மலர் ஒன்றினை வெளியிட்டனர். அதனைத் 'திருக்குறள் களஞ்சியம்' என அழைக்கலாம். கடவுள் வாழ்த்தும் வான் சிறப்பும் சிறந்த பால்வண்ணக் காகிதத்தில் சித்திர வேலைப்பாடுகளுடன் (With Flower Border) அச்சியற்றி ஒவ்வொருவர் இல்லத்தின் வாயிலில் இரண்டு பக்கமும் கண்ணாடி இட்டு அமைக்கும் வண்ணம் இருந்தது. இப்பணிகளுக்கு அன்பர் வ. சுப்பையா அவர்களுக்குத் துணை நின்றார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கா. நமச்சிவாயர் இல்லை ஆனார்.

பெரும்புலவரின் மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், இலக்கிய இலக்கணக் கட்டுரைகள், தமிழ்க்கலைக் களஞ்சியத்தில் கோயில் கும்பாபிஷேக மலர்களில், மாநாட்டு மலர்களில், கல்லூரி மலர்களில், பல அறிஞர்களின் பொன்விழா, மணி விழா மலர்களில் அணி செய்து விளங்கின. அவைகளையெல்லாம் முயன்று திரட்டினால் அதுவே ஒரு பெரும் களஞ்சியமாகத் திகழும். இவ்வாறே பல்கலைக் கழகங்களின் ஆண்டு விழாக்களில் இவர்கள் செய்த சொற்பொழிவுகளும் சிறப்பு வாய்ந்தவை. தமிழகப்புலவர் குழுத் தலைவராகவும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுத் தலைவராகவும் இருந்து பணியாற்றினார்கள்.

நீடிய நல் வாழ்வும் பெருமையும் புலமையும் குற்றமற்ற மனை வாழ்க்கையும் பெற்று விளங்கியதோடு தமிழ்த் தொண்டராயும் விளங்கினார்கள். பள்ளி ஆசிரியராய், கட்டுரையாளராய், பாடநூல் ஆசிரியராய், உரையாசிரியராய், பதிப்பாசிரியராய், கவிஞராய், இலக்கணியாய், ஆராய்ச்சியாளராய், சிறந்த சொற்பொழிவாளராய் விளங்கியதோடு தமிழகத்தின் அணிகலனாயும் விளங்கினார்கள். தமிழகம் எங்கும் புகழ் மணம் பரப்பிச் சிறந்தார்கள்.

தமிழ் அறிஞர்களின் இளைய தலைமுறையினர் அச்சமின்றி வாழவும் மொழித் திறத்தின் முட்டறுக்கவும் இன் துணையாய் அமைந்து வாழ்ந்த பெரும் புலவர், சிந்தாமணிச் செல்வர், செந்தமிழ்க் களஞ்சியம் கலைமாமணி, ஒழுக்கத்தின் திருவுருவத்தின் இன்னுயிர் 4—2—85 திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்குத் தமிழ் தாயின் திருவடிகளில் அமைதி பெற்றது.

வாழ்க மே.வீ.வே புகழ் !

மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் இயற்றியும் பதிப்பித்தும் வழங்கிய நூல்கள்

இலக்கணங்கள்

1. இறையனார் அகப்பொருள்
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் – நச்சினார்க்கினியர் உரை
3. யாப்பருங்கலக் காரிகை
4. யாப்பருங்கல விருத்தியுரை
5 கூத்த நூல்
6 விசாகப் பெருமாள் தமிழ் இலக்கணம் (எழுத்து - சொல்).

பதிப்பித்த நூல்கள்

1. அஷ்டப் பிரபந்தம் - விளக்கக் குறிப்புரையுடன்
2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
3. நளவெண்பா – விளக்கவுரையுடன்
4. குசேலாபாக்கியானம் – குறிப்புரையுடன்
5 தஞ்சைவாணன் கோவை - விளக்கப் புத்துரையுடன்
6. வினோதரச மஞ்சரி
7. பஞ்சதந்திரம் - உரைநடை
8. பஞ்சதந்திரப் பாடல்கள்
9. நீதி நூல்கள்
10. இளைஞர் தமிழ் அகராதி
11 திருவாய்மொழி ஈட்டு - வியாக்கியானம் (10 பகுதிகள்)
12. திருக்குறள் - சொர்ணாம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

13. பத்துப்பாட்டு ஆராய்ச்சி - டாக்டர் இராசமாணிக்கம்
14. பதினெண் சித்தர் ஞானக்கோவை (எம். ஆர். அப்பாதுரை)
15. அரிச்சந்திர புராணச் சுருக்கம்
16. "புலமைப் பரிசில் (இவர்தம் மணிவிழா மலரில் அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு)
17. உயர்பள்ளி, கல்லூரிப் பாட நூல்கள்

இயற்றிய நூல்கள்

1. துருவன்
2. விமலன்
3. பத்திராயு அல்லது ஆட்சிக்கு உரியோன்
4. அல்லாவுத்தீனும் அற்புத விளக்கும்
5. திருக்கண்ணபிரானர்
6. பொதுநலப் புரவலர்
7. குணசாகரர்
8. இளங்கோவன் அல்லது தவளமலைச் சுரங்கம்
9. குணவீர சிகாமணி
10. அரபிக் கதைகள்
11. கம்பராமாயண வசனம் (4 பகுதிகள்)
12. தமிழ் அன்றும் இன்றும்.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 00	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	20 00	60 00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

இறைவணக்கம்

டாக்டர் சரளா ராசகோபாலன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அனைத்திலும் ஒரு முறைவைப்பு அமைந்துள்ளது. கடவுளர்களின் தன்மை சிறப்பாகப் போற்றப்படுவதோடு உலகம் உய்ய அருள் புரிய வேண்டும் என்ற ஆசிரியரின் வேண்டுதலும் அதில் புலனா கிறது (எ,கா. ஏமவைகல் எய்தின்றா லுலகே" — குறுந்) பாரதம் பாடிய பெருந்தேவனார் நற்றிணையை ஏழு அடிகளிலும், குறுந்தொகையை ஆறு அடிகளிலும், ஐங்குறுநூற்றை மூன்று அடிகளிலும், கலித்தொகையைப் பதினேழு அடிகளிலும், பரி பாடலை அறுபத்தைந்து அடிகளிலும், அகநானூற்றைப் பதினாறு அடிகளிலும், புறநானூற்றைப் பதின்மூன்று அடிகளிலும் பாடி யுள்ளார். இந்த அடிவரையறை சிற்றெல்லை பேரெல்லை கடவாமல் பாடியுள்ளமை குறித்தற்குரியது. அதேபோன்று கலிப்பாவினால் பாடப்பட்டுள்ள கலித்தொகையைக் கலிப்பாவாலும் அகவற்பாவால் பாடப்பட்டுள்ள மற்ற தொகை நூல்களை அகவற்பாவாலும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முருகனைப் பற்றிய தாதலின் அதுவே கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைகிறது. அதனால் பாரதம் பாடிய பெருந்தேவனார் தனியாகக் கடவுள் வாழ்த்துப் பாடல் பாடவில்லை.

பதினெண்கீழ்க்கணக்குப் போன்ற நீதி நூல்களிலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளன. திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்றே ஒரு அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் எந்தவொரு தனிப்பட்ட கடவுளையும் குறிக்காது பொதுவான பண்புகளையே குறித்து அமைகிறது. நாலடியாரில் கால்தோயாக் கடவுளின் பாதங்கள் பணியப்படுகின்றன. நான்மணிக்கடிகை, திரிகடுகம் ஆகிய நூல்களில் திருமாலும் இனியவை நாற்பது, ஐந்திணை எழுபது ஆகிய நூல்களில் சிவனும் வாழ்த்தப்படு கின்றனர். இன்னா நாற்பதில் பகவன், பலராமன், திருமால், சிவன் எனப் பல கடவுளரை வணங்கும் போக்கு - ஒரு மாற்றம் காணப் படுகிறது பல கடவுளர் வணக்கத்திற்கும் இங்குக் கால்கோலப் படுகிறது. சிறுபஞ்ச மூலத்திலும் பழமொழியிலும் இறைவனின் பொதுத்தன்மையே சுட்டப்படுகிறது. பழமொழியில் தற்சிறப்புப் பாயிரத்திற்குப் பிறகு கடவுள் வாழ்த்துப் பாடி முறை வைப்பு மாற்றியமைக்கப்படுகிறது. நாலடியாரில்தான் முதன் முதலாக 'முன்னியவை முடிக' என்று வாழ்த்தலுக்குக் காரணம் குறிக்கப்படு கிறது. உலகம் உய்ய இறைவனை வாழ்த்திய நிலையானது நூல்

சிறப்பாக அமைய இறைவனை வாழ்த்தும் குறிக்கோள் உடையதாக மாற்றம் பெறுகிறது. கார் நாற்பது, களவழி நாற்பது, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, திணைமொழி ஐம்பது ஐந்திணை ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது கைந்நிலை ஆகியவற்றில் வாழ்த்துப் பாடல்களே இல்லாமை கவனிக்கத் தக்கது.

சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்து மாற்றம் பெறுகிறது. பல நிலைகளில் புதுமை செய்த இளங்கோவடிகள் இங்கும் புதுமை செய்கிறார். கடவுளரை வாழ்த்தி வந்த போக்கு அரசனோடு தொடர்புடைய இயற்கையை வாழ்த்தும் முறையில் மாற்றம் பெறுகிறது. பிரச்சாரக் காவியமாகிய மணிமேகலையில் புத்தருக்கோ மற்றக் கடவுளருக்கோ கடவுள் வாழ்த்து அமையவில்லை. சீவக சிந்தாமணியிலும் சூளாமணியிலும் அருகனை வாழ்த்துவதோடு அவையடக்கமும் கூறப்படுகிறது. வளையாபதியில் அருகனோடு சாதுசாரணர்களையும் வாழ்த்தும் முறை காணப்படுகிறது. குண்டலகேசியில் புத்தருக்கு வாழ்த்துக் கூறுவதோடு அவையடக்கமும் கூறப்படுகிறது. நாக குமார காவியத்திலும் உதயணகுமார காவியத்திலும் அருகதேவருடைய திருவடிகளை வணங்குவதற்காக வாணி, குரு ஆகியோரை வணங்கும் போக்குக் காணப்படுகிறது. கடவுள் வழிபாட்டின் வளர்ச்சி நிலையும் இங்குப் புலப்படுத்தப்படுகிறது. நீலகேசியில் அருகக் கடவுள் வாழ்த்தப்படும் போக்குக் காணப்படுகிறது பல்லவர் காலத்திற்குப் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு) பிறகு விநாயகர் வழிபாடு ஏற்பட்டதால், விநாயகர் வாழ்த்தும் இடம் பெறலாயிற்று.

நன்னூலில் பிண்டி நீழலில் உள்ள அருகக் கடவுளை வாழ்த்திய நிலை பிறகே வருகிறது. புறப்பொருள் வெண்பாமாலையில் விநாயகர் வாழ்த்துக் காணப்படுகிறது. சிவனைப் பற்றிய திருமந்திரத்தில் கூட விநாயகரை வாழ்த்தியமை, விநாயகருக்கு ஏற்றம் கொடுத்த அக்காலச் சமுதாயச் சூழலைப் படம் பிடிப்பதாக உள்ளது

பிரபந்த நூல்களில் பிள்ளைத் தமிழில் காத்தற் கடவுளாகிய திருமாலைக் காப்புப் பருவத்தில் வாழ்த்துகின்றது மற்றைய பிரபந்தங்களில் நூல் இனிது முடிய விநாயகரையும் அறிவுக் கடவுளாகியசரசுவதியையும்வாழ்த்தும் அமைப்புக்காணப்படுகிறது.

பெருங்காப்பியமாம் கம்பராமாயணத்தில் திருமால், இராமபிரான், சடகோபர், அனுமன், கலைமகள், விநாயகர் ஆகிய பலரையும் வாழ்த்தும் முறை அமைகிறது.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் கடவுள் வாழ்த்து மாற்றம் பெறுகிறது. பாரதியார் நாட்டினை அதிகமாக மதித்ததால் நாட்டு வாழ்த்துப் பாடுகிறார். பின்னால் வரும் பாரதிதாசன் போன்றவர்களும் புதுக்கவிதை பாடுபவர்களும் தாய் மொழிப்பற்றின் விளைவாகத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுகின்றார்கள். இதற்கு மனோன்மணியம் நாடகம் எழுதிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் காரணம் எனலாம். 'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் கவிவாணரிடை ஒரு எழுச்சியும் மாற்றமும் விளைந்தது. அதன் விளைவாக இன்று அரசு விழாக்களில் கூட கடவுள் வாழ்த்து தாய்மொழி வாழ்த்து நாட்டு வாழ்த்து (இறுதியில்) என வாழ்த்துகள் இடம் பெறுகின்றன.

புதுக்கவிதைகளில் கடவுள் வாழ்த்தோ மொழி வாழ்த்தோ இடம் பெறுவதில்லை. கடவுளை விட கவிஞர்கள் தம்மீது அதிக நம்பிக்கை கொண்டிருப்பது ஒருவேளை காரணமாக இருக்கலாம்.

இறைவணக்கம் எல்லா வகையான பாவகையாலும் பாடப் பட்டது. முதலில் உலகம் உய்யும் பொருட்டு அமைக்கப்பட்டது. பிறகு எடுத்துக் கொண்ட நூல் இனிது முடியும் பொருட்டு இயற்றப் பட்டது. இயற்கையை இறைமை நிலைமைக்கு உயர்த்தும் நிலைமை ஏற்பட்டது. கடவுள் ஒருவனை வணங்கும் வணக்கம் கடவுள் பலரை வணங்குவதாக மாற்றம் பெற்றது. சிவனையும் மற்ற கடவுளையும் வணங்கும் முறை மாறி விநாயக வணக்கம் சிறப்பான இடம் பெற்றது. மனிதனையும் (சடகோபர்) இறைவ னாக்கி வணங்கும் முறையும் இருந்தது. நாட்டையும் மொழியை யும் இறைநிலைக்கு உயர்த்தி வணங்கும் முறை அண்மைக் காலத்தில் தோன்றியது. கவிதை நூலில் மட்டுமே இடம் பெற்ற இறை வணக்கம் இக்காலத்தில் அருகி வருகிறது என்று கூறலாம்.

கட்டுரையாளர்க்கு ....

தாங்கள் தமிழ்ப்பொழிலுக்கு அனுப்பும் ஆய்வுக்கட்டுரையை முழுநீளத் (Fool scap) தாளில், அடிக்குறிப்புகள் அவ்வப் பக்கத்தின் கீழ் அமையுமாறு தட்டச்சுச் செய்து இரண்டு படிகள் அனுப்பியுதவுக.

"அறத்தொடு நிலை
தமிழ் நாகரிகத்தின் தனிக்கூறு"

இராம. இராமமூர்த்தி

பண்டைத் தமிழ்மக்களின் தனி நாகரிகத்தை நன்குணர்த்துவன புறத்திணை இலக்கியங்களிலும் அகத்திணை இலக்கியங்களே யாகும். அதனாற்றான் புலமைச் சான்றோர், புறப்பாடல்களிலும் மிகுதியாய அகப்பாடல்களை யாத்துத் தமிழுக்கு அணி செய்தனர். தொகையில் ஐந்தும், பாட்டில் நான்கும் அகத்திணையை விதந் தோதின. ஆசிரியர் தொல்காப்பியரும், தம் பொருளதிகாரத்தில் பெரும்பகுதியை அகத்திணைச் செய்திகளைச் சுட்டுதற்குப் பயன் படுத்தியுள்ளமையை உன்னுக. இவ்வகச் செய்தி, களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளான் விரித்தோதப்படுகின்றது. ஒத்த தலைவனும் தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டு உணர்வொன்றி; நாடறிய நன்மணம் நிகழும் வரை மேற்கொள்ளும் காதல் ஒழுக்கத்தையே களவொழுக்கம் என்பர். தலைவியின் கள வொழுக்கத்தை அறியாத பெற்றோர் தம்மகட்கு மண ஏற்பாடு களைச் செய்ய முற்படுவர். வேற்றுவரைவு நேரினும் அல்லது கள வொழுக்கம் இடையீடு பட்டுழித் தலைவியின் மெய்வேறுபாட்டான் வெறியாட்டயர முற்படினும், நாணினும் தனிசிறந்த கற்புச் சிதை வுறும் என்றஞ்சிய தலைவியும் தோழியும் தம் களவொழுக்கத்தை உணர்த்துவான் வேண்டிக் குறிப்பு மொழிகளான் வெளிப் படுத்துவர். இதனையே "அறத்தொடு நிலை" என்பர்

இவ்வறத்தோடு நிலையை ஆசிரியர் தொல்காப்பியர் களவியலில் 1 "நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்" எனத் தொடங்கும் நூற்பாவில்

"பிறன்வரைவு ஆயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகை"

என்ற அடிகளால் சுட்டுவர். இவ்வறத்தொடுநிலை இனைத்து என்பதையும்,

2. "எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்"

எனப் பொருளியலிற் சுட்டுவர், தொல்காப்பியர். இவ்வறத்தொடு நிலை எத்துணை விழுமியது என்பதையும், அறத்தொடு நின்ற நிலைகளையும் பின்வரும் காட்டுக்களான் உணரலாம்.

செறுத்த செய்யுள் செய்செந் நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலர் எனப் புலவர் பெருமக்களான் பெரிதும் பாராட்டப் பெற்ற கபிலர், ஆரிய அரசன் யாழ்ப் பிரகதத்தனுக்குத் தமிழின் சிறப்பை உணர்த்த, இவ்வறத்தொடு நிலைத் துறையானமைந்த குறிஞ்சி நெடும்பாட்டினைப் பாடினார் என்பதை எண்ணுக ; எண்ணின் களவுக் காதலைப் புலப்படுத்தும் இவ்வறத்தொடு நிலை, தமிழ் நாகரிகத்தின் தனிச் சிறப்பை புலப்படுத்தும் என்பதில் எட்டுணையும் ஐயம் எழுங்கொல் ? குறிஞ்சி நெடும்பாட்டைக் கற்ற ஆரிய மன்னன் யாழ்ப் பிரகதத்தனும். தமிழில் ஈடுபாடு மிக்கவனாய்த் தமிழைக் கற்றுச் சங்கப் புலவரோடொப்பப் பாடுந்திறன் பெற்றான். 3* அவனது பாடல் இன்றும் குறுந்தொகையில் நின்றிலங்குவதைக் காணலாம்.

இவ்வறத்தொடு நிலைத் துறையானமைந்த குறிஞ்சி நெடும் பாட்டில்வேலன் வெறியாட்டயரின் தலைவியின்கற்பு ஒழுக்கத்திற்கு ஏதம் வரும் ; ஏதம் வரின் இறந்துபடும் என உணர்ந்த தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கின்றாள். "அன்னாய் ! வாழி வேண் டன்னை !", என முன்னிலைப்படுத்திக் 'கூறுதல் உசாவுதல்', என்னும் ஒருவகை நீங்கிய ஏனைய அறுவகையானும் தலைவியின் களவொழுக்கதைச் செவிலிக்குப் புலப்படுத்துதல் காண்க. இத்துணை அருமைப் பாட்டினைக் கொண்டிலங்குத லாற்றான், ஆரிய அரசன், இவ்வொரு பாட்டானே தமிழ் நாகரிகத்தை நன்குணர வாய்ப்பாயிற்று. இத்துறையின் சிறப்பினையுணர ஒரு சில காட்டுக்களைக் காண்பாம்.

தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோர் அறத்தொடு நின்ற நிலைகளைக் காண்பாம். தலைவியின் களவொழுக்கம் இடையீடுபட்டது. தலைவன் வரவு தடைப்பட்டது. தலைமகள் மேனி மெலிந்தது ; நிறம் வேறுபட்டாள். இந்நிலைக்குக் காரணியம் அறியாது கவன்றாள் தோழி. தலைவி இறந்து படுமோ என்றஞ்சினாள். எனினும் யாது நிகழ்ந்தது என வினவத் தயங்கினாள். அந்நிலையில் தலைவி, தன் களவொழுக்கத்தைப் புலப்படுத்துவான் வேண்டித் தோழிக்கு அறத்தொடு நிற்கின்றாள். இக்காட்சியினை அகநானூற்றுப் பாடல் ஒன்று அழகுறக் காட்டு கின்றது. அவள் அறத்தொடு நின்ற பாங்கினை, 4* "..............
நாடன்

உருவ வல்வில் பற்றி அம்பு-தெரிந்து
செருச்செய் யானை சென்னெறி வினாஅய்
புலர்குரல் ஏனற் புழையுடை ஒருசிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி அவருள்
ஆரிருள் கங்குல் அணையொடு பொருந்தி
ஓர்யான் ஆகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணொடு நெகிழ்தோளேனே"

எனச் சுட்டுகிறார் கபிலர்.

தினைப்புனங் காத்து நின்றாள் தலைவி. அவளொடு தோழியர் கூட்டமும் உடனின்றது. அதுபோழ்து, தன்னால் அம்பெய்யப்பெற்று அஞ்சி ஓடிய யானை அவ்வழி வந்துற்றதா என வினவியவனாய், வல்வில் பற்றிய மலர்தார் மார்பன் ஒருவன், அவண் வந்தான். அவனைக் கண்ட மகளிரோ பலர். ஆனால் இரவுப் பொழுதில் படுக்கையில் கிடந்தும் உறக்கம் வாராது நீரொழுகும் கண்களொடும் மெலிந்த தோளொடும் நானொருத்தி மட்டும் வருந்தற்குரிய காரணியம் என்னவோ? என்றனள் தலைவி. இது மேற்காட்டிய பாட்டடிகள் தரும் செய்தி. இதில் தலைவி, தன் காதலைப் புலப்படுத்திய நுட்பத்தினைக் காணலாம். தலைவனை மகளிரெல்லாரும் கண்டனர். ஆனால் அவர்கள் வருந்தவில்லை. தானும் கண்டாள்; தான் மட்டும ஏன் வருந்துதல் வேண்டும்?

ஏனையோர் கண்டது பொதுநோக்கம்; வேறொரு பொருட் சிறப்பும் உடையதன்று. தலைவியின் காட்சியோ சிறப்புக் காட்சி; காதற்குறிப்புடையதென்பதை "நீர்வார் கண்ணொடு நெகிழ் தோளேனே", என்ற அடி சுட்டி நிற்றலைக் காண்க. அதனாற்றான் தலைவி தனித்துயருழந்தாள் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இத்துணை நாகரிகமாகத் தன் காதலைத் தலைவி தோழிக்குப் புலப்படுத்திப் பெற்றோர்க்கு உணர்த்தச் செய்கின்ற நிலையைச் சில சொற்களால் அழகோவியம் தீட்டியுள்ளதை எண்ணுக; எண்ணுதொறும் இன்பம் பயக்கும்.

இனி, தோழி அறத்தோடு நிற்கின்ற பாங்கினைப் பார்ப்போம். களவொழுக்கம் இடையீடு பட்டமையான், தலைவி மெலிந்தாள். இதனை அறியாத செவிலியும் நற்றாயும், இந்நோய்க்குக் காரணம் அறிவான் வேண்டிக் கட்டுவிச்சி (குறிகூறுநள்) பால் குறி கேட்கத் தலைப்பட்டனர். கட்டுவிச்சி, தெய்வம் பராவிப் பாடத்

தொடங்குகின்றாள். அவளை நோக்கித் தோழி கூறுமாப் போலப் பாடல் அமைந்துள்ளது. அதனைக் காட்டும் குறுந்தொகைப் பாடலிது :–

*5 "அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்- கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே".

குறிகூறப் புகுந்த கட்டுவிச்சி, சேயோன் மேய மைவரை உலகை முதற்கண் பாடத் தொடங்கினாள். வேறு செய்திகளைக் கூறு முன்னரே, தோழி இடைமறித்து, அகவன் மகளே ! இன்னும் பாடுக பாட்டே ! அவர் நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே ? என வேண்டுகிறாள். அவர் குன்றத்தையே பாட வேண்டுகிறாள் ; ஏன் ? இப்பாடல், தலைவிக்கு இன்பம் பயக்கின்றது. அதற்குரிய காரணியந்தான் என்ன ? அவர் நன்னெடுங் குன்றம் அன்றோ பாடப் படுகிறது ! அவர் யார் ? அவர் முருகவேளா ? அம்மலை முருகவேளுக்கு மட்டுமா உரியது ? அன்றன்று ; தலைவியின் காதல் நெஞ்சை நெகிழ்த்துச் சென்றோனாய தலைமகனுக்கும் உரியதன்றோ ? இதனைக் காணுகின்ற செவிலி, தோழியின் கூற்றைக் கூர்ந்து நோக்குவாள். தலைவியின் இந்நோய் தெய்வத்தானாயதன்று ; இம்மலை நாடன் ஒருவனால் வந்ததென்பதை உணர்வாள். இனித் தலைவியின் மணத்திற்கு, உரிய வழியில் செயற்படத் தொடங்குவாள்.

இத்தோழி கூற்று, தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்கு நாகரிகமாகப் புலப்படுத்தி வெறிவிலக்குதலைக் காண்க. இப்பாடல்ஆசிரியர் அவ்வையார், தலைவியின் காதலுணர்வைக் கவினுறப் பாடியுள்ளார்.

தோழி கூற்றாக அமைந்த அறத்தொடு நிலைப்பாடல்கள் சங்க இலக்கியத்தில் நிரம்பவுள்ளன. "அன்னாய் வாழி வேண்டன்னை" எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடல், தலைவி "மகனே தோழி என்றனள்", என்ற ஓர் அடி கொண்டு தோழி அறத்தொடு நிற்கும் பாங்கு படித்தின்புற வேண்டிய பாடலாகும் என்பதை யாரே மறுப்பர் ?

இனி நற்றாய் அறத்தொடு நின்ற பாங்கினைச் சுட்டி, இக் கட்டுரையினை நிறைவு செய்வாம். தலைவி தலைவனுக்குக் கற்புக்

கடம் பூண்ட நிலைமையினைத் தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்றுணர்த்தினாள். உணர்ந்த செவிலி, நற்றாய்க்கு உணர்த்த, நற்றாய், தந்தைக்கும் தமையன்மார்க்கும் அறத்தொடு நிற்றலை அடியிற் கண்ட பாடல் சுட்டும். இப்பாடல் நற்றிணை '234' ஆம் பாடல். ஆசிரியர் பெயர்அறியலாகாமை வருந்தற்குரித்து.

7★ "சான்றோர் வருந்திய வருத்தமும் நுமது
வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்
திருமணி வரன்றும் குன்றம் கொண்டிவள்
வருமுலை ஆகம் வழங்கினோ நன்றே
அஃதான்று,
அடைபொருள் கருதுவீர் ஆயின் குடையொடு
கழுமலம் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் உறந்தையொடு
உள்ளி விழவின் வஞ்சியும் சிறிதே."

தலைமகற்குப் பெண் வேண்டிச் சான்றோர் அருங்கல முதலிய கொணர்ந்து தலைமகள் பெற்றோரை வரைவு வேண்டினர் தந்தையும் தமையன்மாரும் உடன்படவில்லை. அது கண்ட நற்றாய், "அச்சான்றோர் தந்த அருங்கலமேற்று நம்மகளை அந் நம்பிக்கே மணமுடித்துத் தருதல் சான்றோரைப் போற்றற்கும் நம் குடிப் பெருமைக்கும் தக்கதாம்; அவ்வாறன்றி மிகுபொருள் கருதுவீராயின் உறையூரையும் வஞ்சியையும் ஒருசேரப் பெறினும் அஃது ஈடாகாது", என மொழிவதாக அமைந்தது இப்பாடல்.

இந்நம்பிக்கு மணமுடித்தலே தக்கது; இன்றேல் "வான் தோய் வன்ன உயர்ந்த நம்குடி" வடுப்படும் எனக் கூறு மாற்றான், தலைவி இந்நம்பிக்குக் கற்புக்கடம் பூண்டமையை நனிநாகரிகத்தொடு சுட்டுமாற்றை இலக்கிய அறிஞர் நன்கறிவர். அன்னையின் அன்பும், குடிப்பெருமை காக்க விழையும் உயர்குண மாண்பும்,"வான்தோய் வன்ன குடிமையும்" என்ற ஒரு தொடரான் சுட்டப் பெறலை ஊன்றி நோக்குக. மகள் மறுப்பின், நம்மகளின் உயிர்க்கும் ஏதம் வரலாமென்பதையும் குறிப்பெச்சத்தால் உணர்த்து கின்றாள் அன்னை. பின்னர் மகள் விரும்பியாங்கு மணம் நிகழ்ந்த தெனக் கூறவும் வேண்டுமோ ?

நம் பண்டைத்தமிழ் மகளிர் களவுநெறி நின்று, கற்புநெறிபுக்குச் சிறப்பதற்கு இவ்வறத்தொடுநிலை ஒரு பெரும் வாயிலாய் விளங்கியமையை இலக்கண நூல்களும், இலக்கிய நூல்களும் நன்குணர்த்துகின்றன. மகளிர்தம் காதல்நெஞ்சைப் புலப்படுத்த அறத்தொடுநிலை ஒரு நயத்தக்க நாகரிக நெறியாகவே பண்டை நாளில் நிலவியுள்ளது. அது தமிழரின் நாகரிக வாழ்வுக்கும் மேம்

பாட்டிற்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளது. அதனாற்றான், "குறிஞ்சிப் பாட்," டொன்றானேயே ஆரிய அரசன் தமிழ் நாகரிகம் அறியவும் முடிந்ததென்க. இத்தகு சிறந்த நிலைகளை இன்றைய உலகினர்க்கு உணர்த்து மாற்றான், தமிழரும் தம் பண்டைச் சிறப்பை உணரவும், பிறமொழியினரும் தமிழ் நாகரிகத்தை அறிந்திடவும் செய்வோமாக : வளர்க தமிழ் நாகரிகம்:

சான்றெண் விளக்கம் :

1. இளம்பூரணர் (உ. ஆ)., "தொல்காப்பியம்"—'பொருளதிகாரம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1962, பக்கம் 211 — 213.
   நச்சினார்க்கினியர் (உ. ஆ)., "தொல்காப்பியம்", 'பொருளதிகாரம்' ; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை., 1963 ; பக்கம் 94 — 136
2. மேற்படி — பக்கம் 334 (இளம்)
   பக்கம் 293 — 296 (நச்சர்)
3. "சோமசுந்தரம், பொ.வ ; (உ. ஆ) "குறுந்தொகை"., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை ; 1972 ; பாடல் எண் 184.
4. மேற்படி — "அகநானூறு" — பக்கம் 305 — 308 (பதி : 1970)
5 மேற்படி — "குறுந்தொகை — பக்கம் 34 — 36
6. மேற்படி — "அகநானூறு" — பக்கம் 192 — 193 (பதி: 1970)
7. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ.ஆ) "நற்றிணை"சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை — 1967 — பக்கம் 401 — 404

கலை கூறும் கற்பனை

டாக்டர் இர. குழந்தைவேலு

வாழவைக்கும் பா :

தமிழ்வளம் பெருக்கப் பாடுபட்ட முன்னோர் தமக்கென்று வாழாத வாழ்வினர். அம் முன்னோர் பெருந்தகையாளர் ; பிறர்க்கென்று வாழ்ந்த பேரறிவாளர் ; பிறர்க்குப் பயன்பட்டாலன்றி வாழும் வாழ்க்கை வாழ்வாகாது என்று வாழ்ந்த நயனுடையாளர். அவ்வன்பினரெல்லாம் தம் கருத்திற் பட்ட கருத்துக்களைத் தாம் கருதியவாறு, சுரக்கும் உணர்ச்சிப் பெருக்கால் பாவாகப் பொழிந்தனர். அவர் பெற்ற உணர்ச்சியே பாவில் பதிந்ததென்று சுருங்கச் சொல்லலாம். அவரெல்லாம் தாமே கற்றுச் சுவைத்து மகிழ்தற்குப் பாடலியற்றினாரல்லர். அவர் தாம் திளைத்துத்தோய்ந்து மகிழ்ந்த உணர்வைத் தம் நாட்டு மக்களெல்லாம் பெறத் தம் பாவில் பதிய வைத்தனர். இவ்வாறு நாட்டு மக்கள் வாழப் பயன்பட்டு வாழ்ந்த அவரெல்லாம் தம் பாவால் நிலைபேறு எய்தினர்.

தேர்தலில் கற்பனை :

அமைதி சிறக்கும் ஒரு சூழலில் அவரது நினைவாகக் கிளர்ந்தெழும் உணர்ச்சிப் பொங்கலே பாவாகின்றது அப் பா உலகிற்கு உணர்ச்சி உயிர்போன்றது. பாவினைக் கற்பவர் நெஞ்சம் அள்ளும் பாவாக்குவது உணர்ச்சியாகும். கற்பவர்க்கு உணர்ச்சி தரும் உலகம் அது. உணர்ச்சி தருவது என்பது படைப்பாளரது உணர்த்துந் திறனைச் சுட்டுவதாகும். பாவில் நிற்கும் உணர்ச்சியைப் பிறர்க்குத் தோன்றச் செய்தற்கு வேண்டுவது கற்பனையாகும். கருத்துக்குப் பொருந்தும் ஒரு கற்பனையைத் தேர்ந்தெடுக்கும் சிறப்பால், படைப்பாளர் ஒருவர், தமக்கு நிகர் தாமாக விளங்கும் பாராட்டுக்குரியவராகின்றார்.

நினைவின் அழகு :

கற்பனை என்பது உணர்ச்சி நிலைக்குரியதாகும். அறிவாராய்ச்சி நிலையில் நிலைத்து நில்லாதது அது. அவ்வாறே திண்ணமாக வரையறை ஏற்படக் கூறும் ஒரு வரையறையில் நில்லாதது அது. அது வரையறையைக் கடந்ததாயினும் மக்கள் வாழ்க்கையில் இல்லாதது எனல் இயலாது. வாழ்க்கையில் இல்லாததாயின், பாவாணர் நினைவின்மேல் அது தோன்றுவது

என்று சொல்லுதற்கு இடமே இராது. பாவாணர் தம் நினைவின் அழகாகும் அது ஆதலால், அது வாழ்க்கைக்குரியது என்பது ஏற்படுகின்றது.

நினைவிலிருந்தே பிறப்பது அது. ஆயினும் அது நினைவில் நெடிது நிற்க வாய்ப்பில்லை; வழியில்லை. பாவில் இறங்கிப் படிந்து பொருத்தமாகப் பொருந்தும்போதே அது நிலைத்துப் பொலிதற்கு இடம் ஏற்படுகின்றது. அதனைத் தழுவிக்கொள்ளும் நிலத்திற்கேற்பப் பா நிலைபெற்றுச் சிறக்கும்; வாழும்.

பாச்சுவை தேர்வோர்!

பாவினுள் ஒளிரும் கருத்தினைப் பாக்கலைச்சுவை தேர்வோர், மனத்தில் நோக்கிக் களித்தற்குக் கற்பனையின் தேர்தல் திறன் வேண்டும் என்பது உண்மையாதலைச் சில பாக்கள் துணையாக இங்குக் காணலாம்.

காதல் நோக்கு

திருவள்ளுவர் காட்டும் காதல் உலகம் அது. அங்குக் காதலியின் அடிக்குத் தனித்த மதிப்பிருத்தல் விளங்குகிறது. காதலியின் காலடியைக் கனியைக் கொண்டு கற்பனை பாராட்டத் தலைப்படுகின்றது. அச் சிறப்பினைக் காட்டும் குறள் இது :

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அனிச்சப் பூவோ ஒருவர் முகர்ந்த அளவில் வாடவல்ல மென்மை கொண்டதாகும். அடுத்துக் குறளில் நிற்பது அன்னப் பறவையின் தூவியாகும். அப் பறவையின் வயிற்றுத் தூவி மெல்லியது. இரண்டும் காதலியின் காலடிக்கு வருத்தஞ் செய்தலின் நெருஞ்சிப் பழத்தோடு ஒத்தவை. நெருஞ்சிப் பழத்தினும், நெருஞ்சி முள்ளே வருந்துதலிற் கொடியதாகும். அனிச்ச மலர், அன்னத்தின் தூவி என்னும் இவற்றினும் மெல்லியது காதலியின் காலடி என்பதே இங்குத் தெளிவாகும் கருத்து. இக் கருத்தே காதலன் கருத்தில் முற்பட்டு நின்றது. ஆதலின், காதலன் கருத்துக்குப் பொருந்தவே, நெருஞ்சி முள்ளும் கற்பனையின் மெருகால் அழகாகின்றது. நெருஞ்சி முள் என்பதே வழக்கில் காணப்பெறுவதாகும். இவ் வழக்கும் கற்பனையால் மாற்றம் பெறுகின்றது. இவ்வாறே இனியதாகும் பழமும் இங்கு இன்னாததாகின்றது. காதலன் நெஞ்சத்தில் நிற்கும் காலடி ஆதலால், கற்பனையில் பழம் படும் பாடு இது என்பது தோன்று

கின்றது. கற்பனையின் ஆற்றலுக்கு அனைத்தும் வளைந்து கொடுக்கவல்லது என்பது இங்குத் தெளிவாகின்றது.

ஊடல் நோக்கு :

காதல் உலகில் காதலி ஒருத்திக்குத் தனிமையால் வந்த துன்பம் அது. அத் துன்ப மிகுதியைத் தன் தோழிக்கு மறுமொழி கூற நேர்ந்தபோது, அவள் கூறுகின்றாள். அவளது மறுமொழி கீழ் வருமாறு அமைந்திருக்கின்றது :

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

காதலே கனியாகும் ஒரு கற்பனை இங்குக் காணப்பெறுகின்றது. காதலியால் காதலிக்கப்பெற்றவர் ஒருவர். அக்காதலியைக் காதலிக்கும் காதலராக அவர் வாய்க்கப் பெற்றால், அவளுக்கு அது இனியதொரு பேறாகின்றது; பெரும்பேறாகின்றது. அப்பெரும்பேறே காதலிக்குக் காதல் வாழ்க்கையின் அரும்பயனாகிறது. அப்பயனே விதையில்லாததொரு காதல் கனிக்கு நிகரானதாகின்றது. அக்கனி முழுவதும், விதையில்லாதபோது உவட்டாமல் இனிக்கும் இனிமை பொதிந்த கனியாகின்றது. இங்குக் கனியைச் சுவைக்கும் போது, சுவைக்குத் தடையாகும் விதையோ இல்லை. அவ்வாறே தடையில்லாத இனிமையைப் பெறுதலே காதலிக்குப் பேறாகும். இங்கே தடையற்றதொரு இன்பப் பேறே இருவருக்கும் பொதுவில் வைக்கப்பெறுகின்றது. இன்ப நுகர்ச்சியைக் காதலர் இருவரும் தடையில்லாது எளிதே பெறுதலையே காதலி தன் கூற்றில் பெய்த 'காழில்கனி' என்னும் சொற்கள் விளக்குகின்றன.

இங்குத் "தடை" என்று குறிக்கப் பெற்ற கருத்தின் நுட்பம், சிறிது உற்று நோக்குதற்குரியதாகின்றது. இதன் விளக்கத்திற்குச் சீவகசிந்தாமணியைத் துணைக்குக் கொள்வது பொருத்தமாகும். சீவகன் மனைவியருள் ஒருத்தி சுரமஞ்சரி ஆவள். அவளைக் கூடுதல் வேண்டும் என்பது அவனது பலநாள் விருப்பம். அவ் விருப்பத்திற்கு ஊடல் தடையாகின்றது. அதனைப் பக்குவமாக அவன் விலக்கினான். அவளிடத்து ஊடல் விலகவே, அவனைக் கூடுதற்கு அவளும் விரும்பினாள். முன்னர் அவனுக்கு ஊடல் அளவில் தோல்வி என்பர் ஒரு சாரார். ஆயினும் அடுத்து இருவருக்கும் அது வெற்றியின்பம் விளைத்தது என்பது இங்கு நினைத்து மகிழ்தற்குரியது. அவ் வெற்றியின்பம் பெற்ற அவன் வெளியிட்ட சொற்கள் இவை :

"புலவி நீக்கிக்
காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து"

காதலே தடையில்லாத கனியாயிற்று என்பது இங்குக் கற்பனையால் தெளிவாகின்றது. அறிவியல் உலகுக்கு, விதையற்ற கனியினைக் குறித்த ஒரு கருத்துக் கற்பனையின் துணையாகக் கிடைக்கின்றது என்பது உண்மை.

உணர்ச்சி நிலையில் உருக்கொண்டு, பாவில் பதிந்த இக் கற்பனையோ என்றும் கலைதல் இல்லை; கரைதல் இல்லை. பாவில் பதிந்த பதிவால், இதற்கொரு இறுதி நேர்தல் இல்லை என்பது இங்குத் தோன்றுகின்றது. ஆனால் அறிவியல் துறையைச் சார்ந்த ஆராய்ச்சிவாணர் ஒருவர், 'காழில் கனி'யைக் குறித்துக் கற்பனை செய்வாராயின், அவரது ஆராய்ச்சி வன்மையால் உண்மைக் 'காழில் கனி'யாக அது சிறக்கின்றது. ஆராய்ச்சிவாணர் தம் நோக்கிற்கேற்பச் செய்த கற்பனை, அறிவின் நிலை எய்தும் போது நிலைப்பதில்லை. அக் கற்பனை அழிகின்றது. இறுதியாகக் கற்பனையின் துணைகொண்டு அவர் கண்ட உண்மைக் 'காழில் கனி'யே முதிர்ந்து நிற்கின்றது.

கருத்திற்கு வளம் சேர்ப்பது கற்பனை என்பது இங்குத் தோன்றுகின்றது. பாவிற்கு உயிராகும் அதனைத் தழுவித் தன்னகத்தே கொண்ட சிறப்பிற்கேற்பவே அது சிறப்பெய்தவல்லதாகும் என்பதும் தெளிவாகின்றது.

காதல் உலகத்து ஊடல் வழியில் தும்மல் செய்தி ஒன்று நினைக்கத்தக்கது. தலைவனுக்கு இயல்பாகத் தும்மல் வரவே தும்மினான். அப்போது மன்பதையின் இயல்போடு இணைந்த செயலாகத் தலைவனைத் தலைவி வாழ்த்தினாள். அவ் வாழ்த்தோடு தலைவி அமைந்தாளல்லள். அடுத்து அச்செயலுக்கு மாறுபாடாக, 'உம்மை நினைந்து வருந்தும் மகளிருள் யார் நினைத்தலால் தும்மினீர்?' என்று கருத்தொன்றனைத் தலைவி கற்பித்துச் சொல்லிப் பிணங்கினாள்; அழுதாள். அவ்வாறு பிணக்கத்தோடு தலைவி அழுதலைக் காட்டும் குறள் இது:

"வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று"

ஒருவர் ஆழத்தோடு அழுத்தமாக நினைக்கும் நினைவால், மற்றொருவருக்குத் தும்மல் வருதல் கூடும் என்னும் குறிப்பொன்று இங்குத் தோன்றுகின்றது. மக்கள் தொகுதியில் இருக்கும் ஒரு நம்பிக்கையினடியாகப் பிறந்த கற்பனை இது எனல் கூடும்,

இவ்வியப்போடு மந்தி ஒன்று தும்மும் தும்மலில் எழுந்ததொரு கற்பனை இங்கு நினைத்தற்குரியது. அது வளம் சிறந்த மலைப் பக்கமாகும். அங்கு மந்தி ஒன்று, சுவை மலிந்த பலாப்பழம் தூங்கும் மரத்தினைத் தேர்ந்தெடுத்தது ; கிளையைச் சேர்ந்தது. அக்கிளையின் பகுதியில், கொக்கு இனம் மீன் நாற்றத்தைப் பரவச் செய்திருந்தது. ஒரு பக்கம் மீன் நாற்றம் ; மற்றொரு பக்கம் பலாப் பழ நாற்றம். இருவேறு நாற்றங்களும் அங்கு மோதின. முகரும் போது மந்திக்குப் பலாப்பழம் நல்ல நாற்றத்தைத் தந்தது என்றும், மீன் தீய நாற்றத்தைத் தந்தது என்றும் மதுரை மருதன் இளநாகனார் கருத்துரைக்க முற்பட்டார். இக்கருத்து வெளியீட்டுக் கற்பனைக்குத் தும்மல் குறிப்பே துணை செய்தது. ஒவ்வாத மீன் நாற்றத்திலிருந்து பலாப்பழத்து நாற்றத்தைப் பிரித்து உயர்த்திக் காட்டும் கற்பனையைக் காட்டும் சங்கப் பாடற்பகுதி இது ;

கொழுஞ்சுளைப் பலவின் பயம்கெழு கவாஅன்
செழுங்கோள் வாங்கிய மாச்சினைக் கொக்கினம்
மீன்குடை நாற்றம் தாங்கல் செல்லாது
துய்த்தலை மந்தி தும்மும்.

நல்ல நாற்றங்கொண்ட பலாப் பழச் சூழலில், மீன் நாற்றம் மந்திக்கு ஒவ்வாததாயிற்று என்பதே கற்பனை வெளியிடும் கருத்தாகும். ஒருவகை நாற்றம் ஒவ்வாதபோது, மக்கள் தம் தும்மல், அவ்வொவ்வாத குறிப்பினைக் காட்டுதல் இயல்பாகும். இச் செயலே இங்குக் கற்பனையில் மந்திக்குச் சேர்ந்தது.

இவ்வாறே ஊடல் மக்கள் உலகத்து இயல்பாகக் காணப் பெறுதல் போன்றே வானரங்கள் உலகத்திலும் இருத்தலைப் பா உலகத்துக் கற்பனையொன்று சுருங்கக் காட்டுகின்றது. இக் கற்பனையின் பொருளாம் கருதத்தக்கது.

குற்றால மலை வளத்தாலும் ஓங்கியது. அம் மலையில் வாழும் குறத்தி ஒருத்தி கருப்பொருளறிவில் சிறந்தவள். மலை வளத்தினைக் காட்டும் கனியைக் கொண்டு அவளது கருத்தில் கற்பனையொன்று கருக்கொண்டது. இக் கற்பனைக்கு வானரம் துணை நின்றது ; மந்தி துணை நின்றது. அவளது கருப் பொருளறிவால் நிறைந்த கற்பனையைச் சுட்டிக் காட்டும் பாப் பகுதி கீழ் வருமாறு விளங்குகின்றது :

வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்தி சிந்துகனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்,

இப்பகுதியில் பெய்யப்பெற்ற 'கொஞ்சும்', 'கெஞ்சும்' என்னும் இருசொற்களும் சில ஐயங்களைக் கருத்தில் சேர்க்கின்றன. வானரங்கள் கனியைப் பறித்து மந்திக்கு ஏன் கொடுத்தல் வேண்டும் என்பது முற்பட்டுத் தோன்றும் ஐயமாகும். அடுத்து எழும் ஐயம், மந்தி கனி பறித்து அறியாததா என்பதாகும். மந்தி பெற்ற கனியை ஏன் எறிதல் வேண்டும் என்பது தொடர்ந்து பிறக்கும் ஐயம் இறுதியாக நிற்பது, எறியப் பெறும் கனியைத் தேவர் ஏன் இரந்து கொள்ளப் பாடுபடுதல் வேண்டும் என்னும் ஐயம்.

வானரங்கள் ஏன் மந்திக்குக் கனி கொடுத்தல் வேண்டும் என்ற ஐயம் தீர்தற்குச் சீவகசிந்தாமணி தரும் கருத்து விளக்கம் இங்கு வேண்டுவதாகும்.

கனிவகை வளத்தில் சிறந்ததொரு சோலை அது. அச் சோலையைக் காவலன் ஒருவன் காணச் சென்றான். ஆண் குரங்கு ஒன்று அன்பின் கனியொடு செய்த செயல் அவன் கண்ணில் பட்டது. அக் குறிப்பே இங்குப் பிறந்த ஐயம் தெளிதற்கு வேண்டும். மேற் குறிப்பிட்ட ஆண் குரங்கு, பலாப்பழம் ஒன்றனைப் பறித்தது; சுளைகளைப் பக்குவமாகப் பெயர்த்தெடுத்தது; தன் துணைவிக்கு ஊடல் தீரக் கொடுத்தது.

இச் செயலைக் கொண்டு, ஆணும் பெண்ணுமாக இணைந் திருந்த குற்றாலமலை வாழ் குரங்கினத்துக்கிடையே இருந்த ஊடலை, ஓரளவில் உணர்தல் எளிதாகின்றது. இங்கு ஊடலைத் தணித்துத் தழுவ வேண்டும் என்ற விருப்பத்தோடு, மந்திக்கு வானரங்கள் கனி வழங்கல் நிகழ்ச்சி அமைந்தது என்பது ஏற்படுகின்றது. தணிக்க முற்பட்டபோது ஊடல் நீங்காத மந்தி அக் கனியைப் பெற்று எறியத்தலைப்பட்டது.

இயல்பாக விளைந்த கனியைத் தேர்தலில் கைதேர்ந்தது குரங்கு எனல் வேண்டும். வானரங்கள் ஊடலைப் போக்க முனைந்தபோது, அவை மிக மிக விழிப்பாகச் சுவை நிறைந்த கனியைத் தேர்ந்தெடுத்தல் ஒரு தலை என்பது வெளிப்படை. ஆதலால் அச்சுவை மிகுந்த கனியைப் பெறுதற்குத் தேவர்களே முன்வந்தார்கள் என்று கூறுதல் பொருத்தமாகும். தேவர்களே விழைந்த கனி ஆதலால், அக்கனியின் சிறந்த சுவையைக் குறித்த மதிப்பீட்டில் இறங்குதல் பொருந்ததாது என்பது தோன்றுகின்றது. இந்நோக்கில் அக்கனியின் அருஞ்சுவை வெளிப்படுகின்றது. இவ்வாறெல்லாம் 'மந்தி சிந்து கனி' குறித்த கற்பனை நெடுகச் சென்று சுவை தந்தது.

இறைநோக்கு :

அடுத்துக் கண்டறியாதது காணுதற்குத் துணையாவது கற்பனை என்னும் கருத்து நிற்கின்றது. இறை நோக்கில் கற்பனையின் துணையைக் கருதற்கு இங்கு இடம் இருக்கின்றது.

அப்பாலுக்கு அப்பால் ஆனவன் இறைவன். அங்கு என்றும் இங்கு என்றும் கூறுதற்கியலாதவாறு, எங்கும் பரவி நிற்கும் பேரொளியாகத் திகழ்பவன் அவன். எங்கும் நிறைந்தவனுக்கு ஓர் எல்லை என்பது இல்லை. அவன் எல்லையற்றவன். அந் நிறைவே இறைவன். அவ்விறைவனது உண்மை உருவம், ஓர் எல்லையைக் கொண்ட மனித மனம் மேற்கொள்ளும் ஆராய்ச்சிக்கு அடங்காதது. மனிதன் ஆராய்ச்சியில் ஈடுபட்டு ஈடுபட்டு நினைக்க நினைக்க, அம் முழுநிலையாம் இறைவன். கற்பனைக்கும் எட்டாத தொரு கடந்த நிலையில் ஒளிர்கின்றான். அவ் வளப்பருங் காட்சியின் உண்மை நிலையே, "கற்பனை கடந்த சோதி" என்று சேக்கிழார் உரைப்பதாகும்.

அறிதோறும் அறியாமை காணும் சிந்தனையில் வளரும் வளப் பெருந்தன்மை, கற்பனைக்கு ஓரளவில் எட்டுகின்றது எனக் கூறுதல் தகும். இதனை, "பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி" என்றவாறு தாயுமானார் காணும் காட்சியில் காணலாம். எங்கும் எப்பொருளொடும் கலந்து தங்கித்தானே ஆகும் தனித்தன்மை கொண்டவன் இறைவன். அவன் மலரிலும் நிறைந்த திறம் ஒருவாறு இங்கே விளங்குகின்றது.

மலர் என்ற ஒரு நிலை இருந்தால், மலர்ச்சி நோக்கில், கனி என்ற நிலை ஒன்று இருத்தல் வேண்டும் என்பது ஏற்படுகின்றது. இதனை இராமலிங்க அடிகளார் சுட்டிக் கூறுதல் கொண்டு அறிதற் கியலும் ;

> கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
> குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே.

இங்குக் 'கனியே' என்று சுட்டப்பெற்றதொரு கற்பனை கருதற் குரியது. அடிகளார்தம் மாசறு காட்சியில், கற்பனையாற்றலால் கனிந்த கனி இது. கற்பனை கடந்த இறைவனே இக் கனியின் முதலாகின்றான். இயற்கைக் கூறாகும் கனியில் இறைவன் கலந்து, அக் கனிவடிவங் கொண்டான் என்பதே அது ஆகும். அடிகளாருக்கு இனிமை சுரந்த விருந்து அது மக்களுக்கு அவர் இட்ட விருந்து அது.

கற்பனை பிறத்தற்குக் கண்ணே நல்ல துணையாகும். ஆயினும் கண்ணுக்கு அகப்படாதவன் இறைவன். அவ் விறைவனைக் கண் குளிரக் காண்பது போன்று, அவர் தம் கற்பனைத் திறத்தால் இறைவனைக் கனியில் நுழைத்துக் கொண்டார் ; மக்கள் எளிதே காணுமாறு காட்டினார்.

இந் நெறியில் அடுத்துப் பாரதியார் வெளியிட்ட வினாக்களைச் சுவைத்தல் வேண்டும் :

காயிலே புளிப்பதென்ன ?
கண்ண பெருமானே !
கனியிலே இனிப்பதென்ன ?
கண்ண பெருமானே !

இப் பாவாணர் வரைந்த கருத்தினைச் சற்றுக் கூர்ந்து நோக்குதல் வேண்டும் புளிப்பது காயாகும் அது முற்றிக் கனிந்த நிலையில் இனிமை தருகின்றது. இங்கு ஒரு வளர்ச்சிப் போக்குக் காணப் பெறுகின்றது. இவ் வளர்ச்சி ஒரு முன்னேற்றத்தினைக் குறிப்பிடுகின்றது. இதனால் சீராக வளர்ந்து உயரும், ஓர் உயர் நிலையாகும் நிறை நிலை உண்டு என்ற நம்பிக்கை, இயல்பாகத் தோன்றுதல் இயலும் என்பது தெளிவாகின்றது. அந் நிறைவே இறைவனைக் குறிப்பதாகும்.

இத் தொடர்பில் இறைவனது சிறந்த இனிமையைக் குறித்து அப்பர் கூறுவது இங்கு நோக்குதற்குரியது :

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன்.

கனியைத் தொடக்கத்தில் வைத்து இறைவன் இனிமையைக் காட்ட முற்பட்ட அப்பர் கருத்து இனிக்கின்றது.

இக் கருத்துக்களின் துணையாக, இறைவன் இனிமைக்கு ஈடாக ஓர் இனிமையைச் சுட்டிக் கூறுதலும் இயலாது என்பதும், சுட்டிக் கூறும் அனைத்து இனிமையினும் தனித்த ஓர் இனிமையே இறை இனிமை என்பதும் ஏற்படுகின்றன.

இக் கற்பனை முறையில் பயின்று வந்த கனியே இறைவன் ஆதல் இல்லை ; அக் கனியின் இனிமையே இறை இனிமை ஆதல் இல்லை. இவை இங்கு வெளிப்படும் செய்திகளாகும். இதனை உறுதி செய்வது அப்பர் வெளிப்பட்ட கருத்து. கனியைத்

தொடர்ந்து, பல நிலைகளில் இனிமைகளைப் பொருத்தமுற அமைத்து, இறை இனிமையைக் குறிப்பிடுவதே அது. இங்கு விளக்கத்திற்கு வேண்டுவது இராமலிங்க அடிகளார் அறிவிக்கும் செம்மை நெறி. அந் நெறியினைக் காட்டும் பகுதி வருமாறு :

> கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
> கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக.

இதிலிருந்து கலை உரைத்த பருப்பொருளாகும் கற்பனைப் பொருளைத் தக்கவாறு ஆழமாகச் சிந்தித்து, அக்கற்பனையின் உள்ளே ஒளிரும் நுண்பொருளைப் பற்றிக்கொண்டு போற்றக் கற்றல் வேண்டும் என்பது விளங்குகின்றது.

இவ்வாறு கற்பனை செலுத்தச் சென்ற வழியில், இறுதியாக விளங்கும் கருத்துக்கள் இரண்டு ஆகும். ஒன்று தமிழ்ப்பாக்கலையின் முதல் கற்பனை என்பது ; மற்றொன்று அக்கற்பனையின் முதல் இறை என்பது.

பருப்பொருளும் நுண்பொருளும்

இவ்வாறெல்லாம் தமிழ்ப் பாக்கலை கூறும், கற்பனைகளைக் கொண்டு கண்ட செய்திகளைத் தொகுத்து நோக்கவே, கற்பனையொன்று காட்டுவது பருப்பொருள் என்பதும், அப்பருப்பொருள் துணையாகக் கற்பனை காட்ட முற்படுவது நுண்பொருள் என்பதும் தெளிவாதல் வெளிப்படையாகும். ஆதலால் கற்பனையால் தோன்றும் பருப்பொருளைப் பற்றிக்கொண்டு கொண்டாடுதலைத் தவிர்த்து நுண்பொருளைக் குறிக்கொண்டு கண்டு இன்களி கொள்ளுதலே பாச்சுவை தேர்நெறியாகும் என்பது ஏற்படுகின்றது.

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல்-காண்டிகை உரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

'சொல்லப்பட்ட' என்றதனான்

பல்லிருங்க கூந்தல் மகளிர்
ஒல்லாமுயக்கிடைக் குழைக என்தாரே (புறம்–73)

எனக் காம ஒழுக்கம் பற்றி வரும் வீறும் பெருமிதமாக அடங்கு மெனக் கொள்க. இவை நான்கும் தன் கட்டோன்றிய பொருள் பற்றிப் பிறக்குமென்க.

சூ. 10. உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்பில் வந்த வெகுளி நான்கே (10)

கருத்து: உறுப்பறை முதலிய நான்கும் பற்றி வெகுளி தோன்று மென்கிறது.

பொருள்: வெறுப்பினான் வந்த வெகுளியென்னும் மெய்ப் பாட்டிற்குக் காரணமாகிய பொருள் உறுப்பறை குடி கோள் அலைகொலை என்னும் நான்குமெனக் கூறுவர் புலவர்; இவை நான்கும் பிறன் கட்டோன்றுவனவாய் நிகழும்.

1. உறுப்பறையாவது: உறுப்புகளைச் சிதைத்தலும் ஊறு படுத்தலுமாம். உறுப்பாவது கை கால் கண் செவி முதலிய உடலுறுப்புகளும், தூது ஒற்று அமைச்சு முதலிய அரச உறுப்பு களுமாம்.

எ. டு. முறஞ்செவி மறைப் பாய்பு முரண் செய்த புலி செற்று
....
நிறஞ்சாடி முரண்தீர்த்த நீள்மருப் பெழில்யானை (கலி - 52)

எனவரும்.

2 குடிகோளாவது: தன் குடிமைக்கும் தன்னாற் புறக்கப்படும் குடிமக்களுக்கும் தீங்கிழைத்தல், கொள்ளுவுதல் கோள் என நின்றது.

எ. டு. நெருநெல் எல்லை நீ எறிந்தோன் தம்பி
அகற்பெய் குன்றியின் கலுழும் கண்ணே (புற – 300)

எனவும்

நின் மகள், படையழிந்து மாறினனென்று பிறர் கூற
மண்டமர்க் குடைந்தனனாயின் உண்டெவென்
முலையறுத்திடுவென்யான் எனச்சினைஇ (புற - 278)

எனவும் வரும்.

3. அலையாவது: கோல் முதலாயின கொண்டு ஒறுத்தலும் அலைக்கணுறச் செய்தலுமாம்.

எ. டு. வரிவயம் பொருத சினக் களிறு போல
இன்னு மாறாது சினனே (புறம் - 100)

எனவும்

அம்பண அளவை உறை குவித்தாங்கு
கடுந்தேறுறுகிளை மொசிந்தன துஞ்சும்
செழுங்ககூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் உடற்றியோரே (பதிற் 71)

எனவும் வரும்

4. கொலையாவது: அறிவாற்றல் புகழ் முதலாயினவற்றைக் கொன்றுரைப்பது "கொன்றன்ன இன்னா" என்பார் பொய்யா மொழியார்.

எ. டு :- ஆற்றலுடையோர் ஆற்றல் போற்றாதென்
உள்ளம் எள்ளிய மடவோன், தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே (புறம் 73)

எனவரும்

"வெறுப்பின் வந்த" என்றதனான் தலைவன் பரத்தைமை பற்றித் தலைவி கொள்ளும் சினம் முதலியற்றை இதனுள் அடக்கிக் கொள்க என்பார் பேராசிரியர். அகப்பொருள் பற்றியருவனவற்றை ஆசிரியர் விதந்து கூறுதலை ஈண்டு இலேசினான் அடக்க வேண்டாமை அறிக. ஊடல்பற்றி வரும் சினம் ஆண்டு "இல்லது காய்தல்" என்பதனுள் அடங்குமென்க.

சூ 11:- செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே (11)

கருத்து :- செல்வம் முதலிய நான்கும் பற்றி உவகை பிறக்கும் என்கின்றது.

பொருள்:- உவகை என்னும் மெய்பாட்டிற்குக் காரணமாகிய பொருள் அல்லல் தவிர்ந்த செல்வம், புலன் புணர்ச்சி விளையாட்டு என்னும் நான்குமாமெனக் கூறுவர் புலவர்.

அல்லல் நீத்த என்பதனை செல்வம் முதலிய நான்கினோடும் ஒட்டிக் கொள்க.

செல்வம் முதலிய நான்கும் அறத்தொடு கூடி வாராவிடத்துத் தனக்கும் பிறர்க்கும் அவை வருத்தமும் செய்வனவாதலின் ''அல்லல் நீத்த'' எனச் சிறப்பித்துக் கூறினார் என்க.

1. செல்வமாவது: பொருட் செல்வமேயன்றி அறுசுவை உண்டி முதலிய நுகர்பொருளும், ஆடையணி முதலாய துய்த்தற் பொருளும், கொடியும் படையும் முதலிய அரசச் செல்வமுமாம்.

எ.டு: வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லார்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கியவளனே. (புற-163)

எனவும் ... ... இரவல
வெள்வே லண்ணற் காணர்வூங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே, இனியே
இன்னே மரயினேம் ... ... (புற-141)

எனவும் வரும்

இது தன்கண்ணதாய் நிகழவரும்

2. புலனாவது: ஊழான் அமைந்ததன்னுணர்வான் எய்தும் உண்மையறிவாகிய புலமைப் பேறு.

எ. டு: வழிபடுவோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே
நீ மெய்கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதி நீ பண்டையிற் பெரிதே (புறம்-10)

எனவும்

இகலில் எஃகுடையார் தம்முட்குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் - அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி (நாலடி-137)

எனவும் வரும். இஃது இருபாலும் பற்றி வரும்

3. புணர்வாவது: ஒன்றியுயர்ந்த பாலதாணையாற் பொருந்திய தலைவனும் தலைவியும் எய்தும் உள்ளப் புணர்ச்சியும், மெய்யுறு புணர்ச்சியுமாம். "அல்லல் நீத்த" என்றதனான் உயிரோரன்ன நட்பிற்புணர்ச்சியுமாம் எனக் கொள்க

எ.டு : தம்மில்லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு (குறள் - 1107)

எனவரும்.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்"

என்னும் குறுந்தொகைச் செய்யுளும் அது.

நவில்தொறும் நூல் நயப்போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு (குறள் 783)

எனவும் வரும். இது தண்கண் தோன்றிய பொருள் பற்றி வரும்.

4. விளையாட்டவாது : உள்ள மொத்தாரொடு கூடிச் சோலைபுக்கு விளையாடலும், புனல்விளையாடலும் குரவை முதலிய ஆடலும், இகலின்றிப் புரியும் வீரவிளையாட்டுமாம்.

எ.டு :- மேவர, நான்மாடக்கூடல், மகளிரும் மைந்தரும்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமார்
ஆனா விருப்பொடு அணியயர்ப, காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு (கலி-92)

எனவும்

வையை வருபுனல் ஆடலினிது கொல்
செவ்வேற்கோ குன்றம் நுகர்தல் இனிதுகொல்
(பரிபாடல் திரட்டு) எனவும் வரும்.

துயிலின்றி யானீந்த தொழுநையம் புனலாடி
மயிலியலசர் மருவுண்டு மறந்தமைகுவான் மன்னோ
(கலி 30)

என்பது காட்டுவார் பேராசிரியர். இன்னோரன்ன அல்லல் நீத்த உவகை எனற் கேலாமை கண்டு கொள்க.

இம்முப்பத்திரண்டு பொருளும் நாடகச்சுவைக்கும் உரிமையுடையனவாய் நகை முதலாய எண்வகை மெய்ப்பாடுகட்குச் சிறப்புடையனவாய் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாய் அமைந்து வருதலின் இவற்றை முதற்கண்விதந்தோதினார் என்க.

சூ. 12 :- ஆங்கவை ஒருபாலாக ஒருபால்
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனுக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணுதல் துஞ்சல் அரற்றுக் கனவெனு
முனிதல் நினைதல் வெரூஉதல்மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே

கருத்து :- அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாக வரும், மேற்கூறிய முப்பத்திரண்டு பொருள்களேயன்றி அவையல்லாதவிடத்து எண்வகை மெய்ப்பாட்டிற்குரிய பொருளாக இம்முப்பத்திரண்டும் உள என்கின்றது.

இவை முப்பத்திரண்டும் எள்ளல் முதலியவற்றைப் போல வரையலறப்பட்டு அடங்காமல் எண்வகை மெய்ப்பாட்டினுள் விரவி வருதலானும் புறத்திணைக்குச் சிறந்துரிமை பெற்று நிற்றலானும் வேறாகத் தொகுத்து ஓதப் பெற்றன.

மற்று ஈண்டுக் கூறப்பெற்றுள்ள, வியர்த்தல், தன்மை, விரைவு வாழ்த்தல், நாணுதல் உயிர்ப்பு கையாறு முனிதல் ஆராய்ச்சி ஐயம் முதலியவாக வருவனவற்றொடு பின்னர் அகத்திணைக்குரியவாக ஓதப் பெற்றனவற்றுள் வரும், பொறி நுதல் வியர்த்தல் இல்வலி யுறுத்தல், பாராட்டெடுத்தல், அலர்நாணல் புலம்பித் தோன்றல் கையறவுரைத்தல் இன்பத்தைவெறுத்தல் ஏதமாய்தல் ஐயஞ் செய்தல் முதலியவை ஒத்தனவாக உள்ளமையின் இங்ஙனம் ஈரிடத்துங்கூறியது என்னையெனின் ? அல்வாறு வருவன ஒருபுடை ஒக்குமேனும் அகத்திணைச் செய்யுட்கு மெய்ப்பாட்டுறுப்புக் கூறுங்கால்உடைமை, இன்புறல் முதலிய பொருள்பற்றிக் கூறாமல் புகுமுகம்புரிதல் முதலாய சிறப்புப் பொருள்பற்றியும் எள்ளல் முதலாய பொதுப்பொருள் பற்றியும் கூறல் வேண்டுமென்பதும் புறத்திணைச் செய்யுட்குமெய்ப்பாட்டுறுப்புக் கூறுங்கால் புகுமுகம் புரிதல் முதலாய அகத்திணைக்கே உரிய பொருள் பற்றிக்கூறாமல் உடைமை இன்புறல்முதலாய சிறப்புப் பொருள் பற்றியும் எள்ளல் இளமை முதலாய பொதுப்பொருள் பற்றியும் கூறல் வேண்டும் என்பதும் அறிவித்தற்கென்க.

அது பெறுமாறியாங்ஙனமெனின் ஈண்டு வியர்த்தல், நாணல் எனவும் ஆண்டுப் பொறிநுதல் வியர்த்தல், ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல் எனவும் வேறுபடுத்துக் கூறதலான் பெறுதுமென்க.

இனி இளம்பூரணரும் பேராசிரியரும் இக்கூற்றிய முப்பத்திரண்டினையும் நகை முதலாய எண்வகை மெய்ப்பாடுக்ட்குரிய பொருளெனக் கருதாமல் இவற்றையே மெய்ப்பாடு என்று கருதி உரை விளக்கம் செய்து போந்தனர். நாவலர் சோமசுந்தர பாரதியார் இவை முப்பத்திரண்டும் மெய்ப்பாடு போன்று செய்யுட் பொருள் சிறக்க வரும் உணர்வுகள் என்றும் களவிற்குரிய இயற்கைப்புணர்ச்சி முதலிய நான்கற்கும் முறையே எட்டெட்டாக உரிமை பெற்றுவரும் என்றும் வலிந்தும் நலிந்தும் பொருள் கூறிச் சென்றார். அவர் தம்கருத்து நூல் நெறிக்கு ஒவ்வாமையை விளக்கப்புகின் விரியுமாகலின் பின்வரும் உரைக்குறிப்புகளை நோக்கி மாணாக்கர் உணர்ந்துகொள்க.

பொருள் :- எண்வகை மெய்ப்பாடுகட்கும் அடிப்படையாக எள்ளல் முதலிய முப்பதிரண்டு பொருளும் ஒரு பகுப்பாகியமைய அவையல்லாதவிடத்துப் பிறிதொரு பகுப்பாக உடைமை, இன்புறல் முதலியனவாக வரும் இவை முப்பத்திரண்டும் பொருளாதற்கு உளவாகும்.

இவை, உடைமையின் புறல், நடுவுநிலையருளல் என்றாற் போல ஒருங்கு எண்ணுதற்கு ஏற்ப நிற்றலான் இவற்றை முப்பத்திரண்டாக எண்ணிக் கோடல் வேண்டுமென உணர்த்த அங்கவை ஒருபாலாக (ஈங்கிவை) ஒருபால் எனக்கூறினர் ஆசிரியர் என்க.

அவையும் என்னும் எச்சவும்மை அவற்றின் சிறப்பின்மை தோன்ற நின்றது. உயிர்ப்பெனாஅ, நடுக்கெனாஅ என்பவை செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை எனு என்பவை எண்ணின் கண் வந்தன.

1. உடைமையாவது: மேற்கூறிய செல்வத்தின் வேறுபட்டுப் பிறவாக வரும் கிழமைப் பொருள்களாம்.

எ. டு :- நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம்யாம் (புற 72)

எனவரும்.

மயக்ககுறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே (புற-188)

என்பது மது.

இஃது உவகை என்னும் மெய்ப்பாட்டிற்குப் பொருளாக அமையும். ஈண்டு இம்முப்பத்திரண்டு பொருள்கட்கும் மெய்ப்பாட்டுரிமை கூறுதல் பெரும்பான்மை பற்றி என உணர்க. சிறுபான்மை வேறுபடவரினும் ஆராய்ந்து கொள்க.

2. இன்புறலாவது: தமது உடைமைகளையும் செயல்களையும் பற்றித்தாமே எண்ணி மகிழ்தல்.

எ.டு :- குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொற் கேளாதவர் (குறள் 66)

எனவும்

ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண்ணவர் (குறள் 228)

எனவும் வரும்.

இதுவும் உவகைக்குப் பொருளாக அமையும்.

3. நடுவுநிலையாவது : தமரெனக் கோல் கோடாது பிறரெனக்குணங் கொல்லாது நிற்கும் நயனுடைமையாகிய தகவு

எ. டு :- சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் சமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)

எனவரும்

பெரியோரை வியத்தலுமிலமே
சிறியோரை இகழ்தல் அதனினுமிலமே (புறம் - 192)

என்பது மது.

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

இதனை வடமொழி நாடக நூலார் கூறும் சாந்தம் என்னும் சுவையாகக் கருதிவிளக்குவர் உரையாசிரியன்மார். சாந்தம் வேறு நடுவு நிலைவேறு என அறிக.

4. அருளலாவது: எல்லா உயிர்களிடத்தும் அன்பின் முதிர்ச்சியாகிய கனிவுள்ளத்தாற் புரியும் செயல்.

எ. டு :- உடாஅ போராஅ ஆகுதலறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன் (புற 141)

எனவரும்

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்

வடநூலார் கூறும் கருணையை ஒருபுடை ஒக்கும்) இரக்கம் வேறு இவ் அருளல் மேறு என அறிக.

5. தன்மையாவது: குணவியல்பும் குலவியல்பும் தோன்ற ஒழுகும் இயற்கைப் பண்பு

எ. டு: "வேழம் வீழ்த்த" என்னும் புறப்பாட்டினுள்
கோஎனப் பெயரிய காலை ஆங்கது
தன் பெயராகலின் நாணி ......
......பன்மணிக்குவையொடும் விரைஇக்கொண்மென
சுரத்திடை நல்கியோனே (புறம் 152) எனவரும்

இதன்கண் வல்வில் ஓரியின் தலைமைத் தன்மையும் வள்ளற்றன்மையும் புலப்பட்டமை காண்க
ஈண்டு இஃது உவகைக்குப் பொருளாக அமைந்தது

"திரை பொரு முந்நீர்" என்னும் புறப்பாட்டினுள்
ஈயென இரத்தலோ அரிதே நீயது
நீயது நல்கினும் நல்கா யாயினும்
... ...
கொண்பெருங் கானம் பாடலெமக்கெளிதே (புறம் - 154)

என வரும்.

இதன்கண் மோசிகீரனாரின் புலமைத்தன்மைபுலப்பாடாதல் காண்க ஈண்டு இஃது பெருமிதத்திற்குப் பொருளாக அமைந்தது.

பெருமுலை யலைக்கும் காதின் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவருபேய் மகள் (முருகு - 50–51)

என்புழிப் பேய் மகளின் தன்மை புலப்பட்டவாறு காண்க.
ஈண்டிஃது அச்சத்திற்குப் பொருளாக அமைந்தது.

சீரை தை இய உடுக்கையர் சீரொடு
துனியில் காட்சி முனிவர் (முருகு–126, 137)

இதன்கண் முனிவர் தம் தன்மை புலப்படுமாறும் அது மருட்கைக்கும், பெருமிதத்திற்கும் பொருளாக அமையநிற்குமாறும் கண்டு கொள்க.

தன்மை எண்வகை மெய்ப்பாட்டிற்கும் பொருளாதற்குரியதாகும்.

6. அடக்கமாவது: செல்வமும் ஒளியும் மிகினும், இகலும் இகழ்ச்சியும் நேரினும் பொங்காது நிற்கும் பொறையும் உயர்ந்தோர்மாட்டுப் பணிந்தொழுகும் ஒழுக்கமுமாம்,

எ.டு :- 'கேட்டல் மாத்திரை யல்லது' என்னும் புறப்பாட்டினுள்
தன்பெயர்கிளக்குங் காலைத்தன்பெயர்
பேதைச் சோழன் என்னும் (புறம்-216)

எனவரும் புலவர் கூற்றான் கோப்பெருஞ்சோழன் அடக்கம் புலப்படுமாறு காண்க.

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே (புறம் – 191)

என்பதுமது. இஃது உவகைக்குப் பொருளாக அமையும்

7. வரைதலாவது.- இன்னது செய்வல் இன்னது தவிர்வல் என நியமித்துக் கொண்டு ஒழுகும் ஒழுக்கம்.

எ.டு :- பார்ப்பார்க் கல்லது பணிபறியலையே
பணியா உள்ளமொடு அணிவரக் கெழிஇ
நட்டோர்க்கல்லது கண்ணஞ்சலையே (புற- 7-3)

என வரும்

அரிவை தோளளவல்லதை
நினதெனஇலைநீ பெருமிதத்தையே (புற - 122)

என்பதுமது. இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்

8. அன்பாவது : தொடர்புடையார் மாட்டும், நட்டார் மாட்டும் தம் விருப்புடைய பொருள்கள் மாட்டும் செலுத்தும் கைம்மாறு கருதாத நேயம்

எ டு :- சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத்தனையே (புறம் - 91)

எனவும்

இருமருப் பெருமை ஈன்றணிக்காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாஅல் மைம்பயிர் ஆரும் (குறுந் – 181)

எனவும் வரும்

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்

9. கைம்மிகலாவது : குறையாயினும் நிறையாயினும் அளவில் மிகுதல்

எ. டு. :- பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும், நீரில்
வினைபுனை நல்லில் இனைகூக் கேட்பவும்
இன்னாதம்ம ஈங்கினி திருத்தல் (புறம் - 44)

இதன்கண் நெடுங்கிள்ளி பன்னாள் அரணடைத் திருந்தமையான் மக்கள் துயர் கையிகந்தமையைக் கோவூர் கிழார் புலப்படுத்தியமை காண்க.

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரன் தேய்க்கும் அரம் (குறள் – 527)

என்பது மது

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

10. நலிதலாவது: இடுக்கணுறுதலும் உறுத்தலுமாம். இஃது தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய சொல்

எ.டு :- குன்றத் திருந்த குரீஇயினம் போல
அம்பு சென்றிருத்த அரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சில் ஒப்ப நிலமிசைப்புரள (புறம்-19)

இது பிறரால்தான் நலிவுற்றது

மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர் தெறித்த
குடப்பால் சில்லுறை போலப்
படைக்கு நோயெல்லாந்தானாயினனே (புற-276)

இது தன்னான் பிறர் நலிவுற்றது.
இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

11. சூழ்ச்சியாவது: புறநிகழ்ச்சிகளைப் பற்றி ஆழ்ந்து எண்ணுதல். சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் (குறள் 671) என்பதனான் இதன் பொருளுணர்க.

எ.டு-: பல்சான் றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சி பல்சான்றீரே (புற–246)

எனவரும்

பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள்தெவ்வோர்
எழுபதுகோடி யுறும் (குறள்639) என்பதும்து

இஃது அச்சத்திற்குரிய பொருளாக அமையும்

12. வாழ்த்தலாவது:- உலக நலங் கருதி இறையையும் தெய்வமுதலாயவற்றையும் போற்றுதல்

எ.டு:- வாழியாதன் வாழியவினி
நெல்பல பொலிக பொன்பெரிது சிறக்க (ஐங்-1)

எனவும்

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச்சென்னிக் குளிர்வெண் குடையோன்றிவ்
அங்கண் உலகளித்தலான் (சிலம்பு-கடவுள் வாழ்த்து)

எனவும் வரும்

"நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க" என்பதுமது இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

13. நாணலாவது ; சான்றோர் பழிப்பனவற்றை ஏலாமையும் புரியாமையுமாம். தன்புகழ் கேட்டவழி எய்தும் மென்மையும் இதன்கண் அடங்கும்.

எ. டு :- தன்போல்வேந்தன் முன்புகுறித்தெறிந்த
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாள் வடக்கிருந்தனன் (புறம் 65)

எனவும்

வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி
யானது பெயர்த்தனெனாகத்தானது
சிறிது என உணர்ந்தமை நாணிப்பிறிதுமோர்
பெருங்களிறு நல்கியோனே (புறம் 394)

எனவும்

...........மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக்கூறி
நின்யான் பிழைத்ததும் நோவாய், என்னினும்
நீ பிழைத்தாய் போல் நனிநாணினையே (புற 43)

எனவும்

தம்புகழ் கேட்டார் போல் தலைசாய்ந்து மரந்துஞ்ச (கலி)
எனவும் வரும்

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்

14. துஞ்சலாவது: செயலூக்கமின்றிப் புலனொடுங்கிக் கிடத்தல் – உறக்கமெனினும் ஒக்கும்.

எ. டு :- சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடனிறுக்கும்
மூத்தீ விளக்கிற் றுஞ்சும் (புறம் – 2)

எனவும்

நூல்விரித்தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற்போகா முதிர்வினள் யாயும் (புறம் – 159)

எனவும் வரும்

இஃது இனிவரலுக்குப் பொருளாக அமையும்.

15. அரற்றாவது அறிவொடுபடாது ளெருவுதலும் உறக்கத்தின் கண் வாய் சோர்தலுமாம்

எ. டு :- கிண்கிணிப் புதல்வர் பொலி கென்றேத்தித்
திண்டேர் அண்ணல் நிற்பா ராட்டிக்
காதற் பெருமையிற் கனவின் அரற்றும் என்
காமர் நெஞ்சம் (புறம் 198)

எனவரும்

இது மருட்கைக்கும் உவகைக்கும் பொருளாக அமையும்

16. கனவாவது : உறக்கத்தின்கண் நிகழும் உணர்வு வெளிப்பாடு

எ. டு :- கடற் சிறு காக்கை காமர் பெடையொடு
கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்
வெள்ளிறாக் கனவும் நள்ளென்யாமத்து (அக 170)

எனவரும். இது பெரும்பான்மை உவகைக்கும் சிறுபான்மை மருட்கைக்கும் ஏனையவற்றிற்கும் பொருளாக அமையும்.

கொடுவரி தாக்கி வென்றவருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்ததாகலின்
கனவிற்கண்டு கதுமென வெரீஇப்
புதுவதாக மலர்ந்த வேங்கையை
அதுவென உணர்ந்ததன் அணிநலம் முருக்கிப்
பேணாமுன் பின் தன் சினந் தணிந்து
காணும் பொழுது நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும் (கலி 49)

இதன்கண் வெகுளிக்கும் நாணி இறைஞ்சும் என்பதனால் நகைக்கும் பொருளாயின்மை கண்டு கொள்க,

17. முனிதலாவது : கொள்ளாவழியும் மாறுபட்டவழியும் எய்தும்வெறுப்பு

எ. டு :- .... தாங்கருங்காவலன்
காணாதீத்த இப்பொருட்கியானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் (புற 208)

எனவும்

கந்துமுனிந்துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி ஆலும்ஆங்கண் (புற-178)

எனவும் வரும்.

இஃது வெகுளிக்குப் பொருளாக அமையும்

18. நினைத்தலாவது: ஒன்றனது பயனை விரும்பி அதனை இடைவிடாது எண்ணுதல் - கழிந்தனை மீள எண்ணுதலுமாம்

எ. டு :- எந்தை வாழி அதனுங்க என்
நெஞ்சந்திறப் போர் நிற்காண்குவரே (புற -)

எனவும்

நீரோடு நிறைந்த ஈரிதழ் மழைக்கணென்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந்திசினே நற்போர்க்குமண (புற - 164)

எனவும் வரும்

இஃது உவகைக்கும் சிறுபான்மை அச்சத்திற்கும் பொருளாக அமையும்.

19. வெரூஉதலாவது : விரும்பத்தகாதன கண்டுழியும் நிகழ்வுழியும் எய்தும் விதிர்ப்பு

எ. டு ;- காடுகவர் பெருந்தீ ஓடுவயின் ஓடலின்
அதர் கெடுத்தலறிய சாத்தொடு ஓராங்கு
மதர் புலி வெரீஇய மையல் வேழத்து
இனந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
(அக - 39)

எனவரும். இஃது அச்சத்திற்குப் பொருளாக அமையும்.

20 மடிமையாவது: செய்தற்குரியவற்றைச் செய்யாது சோர்ந்திருத்தல். அஃதாவது முயற்சியின்றிக்கிடத்தல்

எ. டு :- அறந்தலைப் பிரியா தொழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கில் (அக - 173)

(வருத்தம் - முயற்சி) எனவரும்.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

21. கருதலாவது ஒன்றைச்சுட்டி அதனை ஆழ்ந்து எண்ணுதல்

எ. டு :– ஆ அங்கு, எனைப்பகையும் அறியுநன் ஆய்
[எனக்கருதிப் பெயரேத்தி
வாயார நின் இசை நம்பி
சுடர்ச் சுட்ட சுரத்தேகி
இவண்வந்த பேருநசையேம் (புற - 236)

எனவரும்.

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்.

22. ஆராய்ச்சியர்வது: ஒன்றனது நலந்தீங்குகளை நடுவு நின்று நோக்கியறிதல்.

எ.டு :- கோடு துவையா கோள்வாய் நாயொடு
காடுதேர்ந் தசைஇய வயமான் வேட்டு
வயவர் ... ... (நற்-276)

எனவரும். தேர்தல் ஆராய்ச்சியின் பயனாகலின் இச்செய்யுளுள் தேர்ந்தசைஇய' என்றதனான் ஆராய்ந்தமை பெறப்படும்.

தத்தங் கலங்களுள் கையுறை என்றிவற்கு
ஒத்தவை ஆராய்ந்தணிந்தார் (கலி-84)

என்பதுமது

இது பெருமிதத்திற்குப் பொருளாக அமையும்

23. விரைவாவது: காலத்தையும் இடத்தையும் சுருக்கி மேற் செல்லக்கடிதுவிழையும் உள்ள எழுச்சி

எ.டு :- கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் தோழற்குவருமே (புற-275)

எனவரும்

போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ (புற-82)

என்பதுமது.

இஃது உவகைக்குப் பொருளாக அமையும்.

24. உயிர்ப்பாவது: ஆற்றாமை காரணமாக எழும் நெடு மூச்சு (நெட்டுயிர்ப்பு)

எ.டு:- திருந்தரை நோன்காழ் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கைய, வெய்துயிர்த்து
அலமரல் யானை உருமென முழங்கவும் (புற-44)

எனவும்

பருந்துயிர்த்து இடைமதில் சேர்க்கும் புரிசை (புற-383)

எனவும் வரும்.

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

25. கையாறாவது : விருப்பிற்குரிய பொருளைப்பிரிதலும் இழத்தலும் பற்றி வரும்செயலறவு

எ. டு :- புல்லென் கண்ணர் புரவலர்க் காணாது
கல்லென் சுற்றமொடு கையழிந்து, புலவர்
வாடிய பசியராகிப் பிறர்
நாடுபடு செலவின ராயினரினியே (புற 240)

எனவரும்

இஃது அழுகைக்குப் பொருளாக அமையும்

26. இடுக்கணாவது : இடையூறு காரணமாக வரும் துன்பம்.

எ டு:- அறனில் கூற்றம் திறனின்று துணிய
பிறனாயினன் கொல்இறீஇயர் என் உயரென
நுவல்வுறு சிறுமையள் பலபுலந்துறையும்
இடுக்கண் மனையோள் தீரிய இந்நிலை
விடுத்தேன்... (புறம் 210)

எனவரும்

இஃது அழுகைக்குப் பொருளாக அமையும்

27. பொச்சாப்பாவது:மறத்தல் கூடாதவற்றை மறந்திருத்தல்

எ. டு: - நள்ளிவாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலை
கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் (புற - 149)

எனவரும்

இஃது இளிவரலுக்குப் பொருளாக அமையும்.

28. பொறாமையாவது: செருக்கும் திறலும் காரணமாக ஒன்றைப் பொறுத்தலாற்றாத பண்பு

எ. டு :- வையங் காவலர் வழிமொழிந்தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறா அது
இடம் சிறிதென்னும் ஊக்கந்துரப்ப (புற - 8)

எனவரும். இது பெருமிதத்திற்குப் பொருளாக வரும்,

அழுக்காறு என்னும் பொறாமை வேறு இதுவேறு என உணர்க. அழுக்காறு அறனில் குணமாகலின் அதனை மெய்ப் பாட்டிற்குரிய பொருளாகக் கூறுதல் ஒவ்வாதென அறிக.

29. வியர்த்தலாவது : இகல்காரணமாக வரும் உள்ளப் புழுக்கம். மெய்ப்புழுக்கம் சிறுபான்மைவரினும் கொள்க.

எ. டு :- பொள்ளென ஆங்கேபுறம்வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளியவர் (குறள் – 487)

இது வெகுளிக்குப் பொருளாக வரும்.

பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள் என்பது மெய்ப்புழுக்கம். இஃது இனிவரல் பற்றி வரும்.

30. ஐயமாவது : ஒரு பொருளை இன்னது என வரைந்துணர்தற் காகதமனத்தடு மாற்றம்.

எ. டு :- செருப்பிடைச் சிறுபரலன்னன்
....
யார்கொலோ அளியன் தானே, தேரின்
ஊர்பெரிதிகந்தன்றுமிலனே, அரண்எனக்
காடுகைக் கொண்டன்றுமிலனே (புற – 257)

எனவரும்

நாடனென்கோ ஊரனென்கோ
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பனென்கோ
யாங்ஙனம் மொழிகோ ஓங்குவாட் கோதையை
(புறம் 49)

என்பது மது

ஈண்டு இஃது உவகைக்குப் பொருளாக நின்றது
இது பிறமெய்ப்பாட்டிற்குரிய பொருளாகவும் வருவதற் குரித்தாகும்.

31. மிகையாவது : பழிவழிச் செல்லும் செருக்கு
(மிகை குற்றம்)

எ. டு : மன்னியசென்ற ஒண்ணுதலரிவை
புனல்தரு பசுங்காய்தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்றொன்பது களிற்றொடு அவள்நிறை
பொன்செய்பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண் கொலைபுரிந்த நன்னன் (குறு-292)

எனவரும்.

இஃது வெகுளிக்குப் பொருளாக அமையும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

இதழ் வெளியீடுகள்

செய்தி மலர் –திங்களிதழ் தமிழ்க்கலை -முத்திங்களிதழ்

News Bulle tin –திங்களிதழ் Tamil Civilization -முத்திங்களிதழ்

கட்டண விவரம்

திங்கள் இதழ்

ஓராண்டு	உ ரூ. 5	4 தாலர்
மூன்றாண்டு	உ ரூ. 12	10 தாலர்

முத்திங்கள் இதழ்

ஓராண்டு	உ ரூ 50	10 தாலர்
ஐந்தாண்டு	உ ரூ 200	40 தாலர்

	நூல்கள்	பக்கம்	உரு.
1.	தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் 50 புலவர் செ. இராசு	356	150
2.	கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை), இ. வை. அனந்தராமையர் அடிக்குறிப்புடன்	1228	150
3.	சங்க இலக்கியக் கட்டுரைகள்-கருத்தரங்கம்	234	30
4	ஆராய்ச்சித் தொகுதி மு. இராகவையங்கார்	551	100
5.	தொல்காப்பியம்-சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை	324	60
6.	தொல்காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம் பேரா. க. வெள்ளைவாரணனர்	474	75
7.	நன்னூற் காண்டிகையுரை ஆறுமுக நாவலர் பதிப்பு	398	65
8.	பெரிய திருமொழி உரையும் தமிழாக்கமும் டாக்டர் தெ. ஞானசுந்தரம்	688	
	நூலகப்பதிப்பு		180
	பொதுப்பதிப்பு		130
10	நீலகேசி (உரையுடன்) பேரா. சக்கரவர்த்தி நயினார் பதிப்பு	848	140
11	சட்டவியல் பேரா. மா. சண்முகசுப்பிரமணியம்	416	
	நூலகப்பதிப்பு		92
	மாணவர் பதிப்பு		36
	தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் பேரா. கே. எம். வேங்கடராமையா	564	155

விற்பனைக் கழிவு :- அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படி
களுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ. 50 00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6 00
கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ 4 00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு - பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2 00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0 62
சிவமும் செந்தமிழும்-பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ. 0 25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	7 50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ. 6 00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமா மகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம் பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர் :

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

BOOK-POST

60 திரு. பா. இறையரசன், எம். ஏ.,
அன்னை இல்லம்,
அஞ்சற்றுறை குடியிருப்பு,
தஞ்சாவூர். 6

ஆசிரியர்,
தமிழ்ப் பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம். தஞ்சை